

ஏவாள்

Pax Ravichandra

pax.ravichandra@gmail.co

31-1-2024

சத்திய தரிசனம்	
	ஏவாள்
எண்	பெயர்
1	ஆதாம் ஏவாள்
2	ஆதாமின் தனிமைத் துயர்
3	ஏதேன் தோப்பு
4	இறை நிந்தை
5	இறைமகனும் நான்கு மனிதர்களும்
6	இரும்புச் சிலுவை
7	இறுதிப் பயணம்
8	எது ஜெபம்?
9	எது மதம்
10	இதயகீதம்-
11	ஏவாள்
12	ஞானம்-பாவம்-
13	ஞானத்தேடல்
14	வழியும், உண்மையும், வாழ்வும் நானே
15	இறைவன்-இருக்கின்றானா?
16	இறைவன் இறைதேடல்
17	இறையன்பு
18	கஜீராகு-
19	கலைந்த கனவுகள்
20	காமத்திலிருந்து கடவுளுக்கு

எண்	பெயர்
21	காயமே இது பொய்யடா
22	காயம், பற்று
23	கீதாஞ்சலி
24	கொலையும், இரட்சணிய இறையியலும்
25	குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்
26	குணமளிக்கும் கூட்டம்
27	மங்கள நாயகி
28	மனிதன் தேடாத இறைவன்
29	மனிதன், மிருகம், தெய்வம்
30	மனிதனும் மதமும்
31	மனிதர் கட்டிய கோயில்
32	மரணம்
33	மதவாதம்
34	மதம் எனும் மாயை
35	மதம்

ஆதாம் –ஏவாள்

புல்லும், பூஞ்செடி கொடிகளும், மாமரங்களும் பூச்சூடி அலங்கரிக்க
பூந்தும்பிகளும் வண்டினங்களும் பாட்டிசைத்து ரீங்கரிக்க-
பூமியெங்கும் வசந்தத்தின் வண்ணக்கோலங்கள்-ஆதாமின் இதயத்துள்
பாலையின் வெறுமை-இனம்புரியாத தனிமையின் கொடுமை

துள்ளி வியைாடும் புள்ளிமான்களும், கொஞ்சி விளையாடும்
வெள்ளைப் புறாக்களும், கவிபாடும் புள்ளிக் குயில்களும்
கிள்ளை மொழி பேசும் பச்சைக்கிளிகளும்
காதல் இசைபாட எங்கும் காதல் வெள்ளம்

அல்லியும் ஆம்பலும் சூடிய பொய்கையில்
கயல்களும் துள்ளி காதல் செப்பிட-கத்தும் தவளைகளும்
காதலால் பாய்ந்து களிநடனம் புரிந்தன.

வெள்ளி முளைத்த வானில் விளையாடும் வெண்ணிலவும்
தனிமையின் துயரம் கூட்ட, ஏதேன் தோட்டத்து-
ஆதாமின் இதயத்துள் ஏகாந்தத்தின் ஆக்கிரமிப்பு

உறவாடத் துணை தேடும் கலைமானாய் இதயம் புலம்பிட
கரைபுரண்டு திரும்பும் அலைபோல்-நெஞ்சம்
வெறுமைக்குள் திரும்பத் திரும்ப அலைபாய
மனதில் இனம்புரியாத சோகத்தின் நிலைப்பு

இதுவரை அறியாத துயருக்குள் இதயம் மூழ்கித் தவிக்க
கோலின்றிக் குருடன்போல் நெஞ்சம் தட்டு தடுமாறி நடக்க,
நரகாய் வாட்டும் ஏகாந்தம், இரசிக்க மனமில்லாத வசந்தம்

தனிமையின் கொடுந்துயரத்தை அறிந்த தந்தை-ஆதாமை
ஆழ்துயிலில் உறங்கவைத்தே அவன் இடது விலா என்பெடுத்து
பெண்ணெனும் பேரழகை ‘உரு’ ஆக்கி, உயிர் கொடுத்தே
ஆதாமின் உயிர் துணையாக்கி மகிழ்ந்தார்

பெண்ணழகோ-பூவழகு, இடையழகோ-கொடியழகு
விழியழகோ-கயழலகு, முகவழகோ நிலவழகு
இவளோ -முதல் ஆண் கண்ட பெண்ணழகு
தனிமைத் துயர் நீக்க இறை தந்த தாரமோ பேரழகு

துயில் கலைந்து கண் விழிக்க, மொழியிழந்து தோகை மயிலும்
நடைபழகி நாணி நிற்க, விழிகள் கலந்து காதல் பிறக்க
இறைவன் படைக்காத காதலர் உலகை-இருவரும்
இணைந்து படைத்தே இன்பவனத்தில் பூரித்தார்

ஏதேன் தோட்டத்து-ஆதாமின் இதயத்துள் வசந்தவிழா-
இருமனம் இணைந்து திருமணமாய் கொண்டாடும் காதல் விழா

கண்வழி நுழைந்து-கருத்தினில் கலந்து
நெஞ்சினில் வாழும் தேவதை இவள்தானோ?
என் என்பின் என்பானவள் என் ஊனின் ஊனானவள்
என்னுள்ளோடும் குருதியிலும் உயிர்காற்றிலும் கலந்தவள்

என்னுள்- எனக்காய்த் தவமாய் தவமிருந்தவள் இவள்தானோ?
என்பில் உருவாகி-இறையன்பில் உயிராகி
என்னைச் சேர்ந்த என் என்போ? இறையன்போ-இவள்

பெண்ணாகிப் பேரழகாகி என்னோடு சேர
தந்தை இறைவன் தந்த அன்புறவோ- இந்தத் தேன்கரும்பு?
என் என்பில் இறைசிற்பி வடித்த காதல் பொற்சிலையோ?
கவிஞனாய் என்னை மாற்றிய கானக்குயிலோ?

நாழிகைகளே யுகங்களாக, நாளும் பொழுதும் தனிமைத்
தவமிருந்து வரமாய் பெற்ற காதல் தேவதை இவள்தானோ?
இருளுக்கு ஒரு வெண்ணிலவு, ஏகாங்கி எனக்கு ஒரு பெண்ணிலவு
இவளோ என் தேன்நிலவு, இதயம் தேடிய அன்புறவு

முத்தங்கள் ஊறும்-தித்திக்கும் இதழ் "கள்"
முப்பொழுதும் வற்றாத இன்பச்சுனைகள்
காமத்துப் பாற்கடலில் உள்ளங்கள் ஆனந்த நீராட
கடவுளும் மகிழ்ந்தார் படைப்பின் முழுமை நிறைவேறிட

இன்பதுணையாய், இறைவன் தந்த வாழ்கைத் துணையிவள்
இறைமகளிவள் ஒன்றாய் கலந்து படைப்பை தொடர்ந்திட
படைத்தவன் படைத்த அன்பின் பிணைப்பிது
காதலும் பிறந்திட கவிதையும் பிறந்தது.

உலகின் முதல் காதல் கவிதையை ஆதாம் பாடிட
காதலனைக் கவிஞனாக்கிய ஆனந்தம், காதல் தேவதை
ஏவாள் மனதில் பூவாய் மலர்ந்திட எங்கும் புதுவசந்தம்

என்னையும் தன் சாயலாய் படைத்தவர்-என்னில்
ஒரு பாதி பெண் எனச் சொன்னவர்-தானும்
ஆண் பெண் இணைந்த அர்த்தநாரிஸ்வரன் எனச்
சொல்லாமல் சொன்னாரே தந்தை இறைவன்.?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10.07-2023

தனிமைத்துயர்-ஆதாம்- (*Adam's Syndrome*)

{ஆண்டவராகிய கடவுள்-மனிதன் தனியாய் இருப்பது நல்லதன்று
அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார் (தொ. நூ.2-18)}

———

என்னைத் தழுவும் பூங்கொடியோ?-இவள்,
என்னுள் உலாவரும் சுவாசக்காற்றோ?, என்
இருண்ட வானில் ஒளிதரும் வெண்ணிலவோ? -பாவையிவள்
என் பூவனத்தில் காதல் சிந்துபாடும் பூங்குயிலோ?

தாயாய் என்னைத் தாலாட்டும் அன்புறவோ?,
என் தனிமைத் துயர் தீர்க்கும் வானமுதோ?
வாழ்க்கைத் துணைாய் இறை ஈந்த வரமோ?-காதலால்
என் உள்ளத்தை கொள்ளை கொண்ட தேவதையோ?

என் என்பின் என்பானவள், என் ஊனின் ஊனானவள்
என் இதயத் தவிப்பை உணர்ந்தே என்னிலிருந்து-இறை படைத்த
பெண்ணிவள்-ஏவாள் என் இதயகோயிலின் காதல் தேவதை.

மது போதையோ-சில மணி நேரம், மாதிவள் காதல் போதையோ
காலம் உள்ளவரைக்கும், மானுடன் நெஞ்சில் நிலைக்கும்

இறைவன் இணைத்த காதல் உறவிது
இதயச் சங்கமத்தின் இருப்பிது.
மானுட சந்ததியின் தொடக்கமிங்கே
காதல் வரலாற்றின் பிறப்புமிங்கே.

ஏதேன் தோட்டமமெங்கும்- எதிரொலிக்கும் ஆதாமின் காதல் கீதம்
ஏவாளை மயங்கவைத்த முதல் மனிதனின் முதல் காதல் பாடல்

இன்று- (தனக்கு தகுந்த துணையை மனிதன் காணவில்லை-(தொ.நூ..2:23)

——————————————————————

என் இதயமெங்கும் ஏதேன் தோட்டத்து
ஆதாமின் ஏக்கம்,
இறைவனிருந்தும், கூட எல்லாமிருந்தும் -
கொடிய தனிமையின் தாக்கம்.

காதற் கிளிகளின் கிள்ளை மொழியும், சோடிப் புறாக்களின்
காதல் ஒலியும் கூடி விளையாடும் -மான்களின் காதல் நிலையும்
மனதை வாட்டிட, சிலந்தி வலையில் சிக்கிய பட்டாம் பூச்சியாய்
தனிமையில் சிக்கித் துடிக்கும் சின்ன இதயம்.

மூச்சை முட்டும் தனிமை, நெஞ்சின் ஏக்கத்தை கூட்டிட,
அலைபாயும் நெஞ்சம், நீரோடை தேடும் மானாய்
பாலையில் அன்பைத் தேடி அலையும்.

சூனியத்தின் கொடிய ஆக்கிரமிப்பு இதயத்தை வாட்டிட
தலைசாய்த்திட தாய்மடி தேடும் குழந்தையாய்
அன்பைத் தேடி அலையும் -குழந்தை மனம்.

அனல்காற்று வீசும் பாலையாய் காளை மனம் கொதித்து கிடக்கும்
அன்பு மழைக்காய் இதயம் பாலைவன ரோஜாவாய் ஏங்கித் தவிக்கும்,
ஏழ்கடலின் அலைகள்போல் சோகம் நெஞ்சில் அலைமோதிட,
இமயத்தை சுமக்கும் பாரமாய் இதயத்தை “தனிமை வாட்டும்”

தனிமையின் கொடுமையில், என் தேவனே! என் தேவனே!
ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர் மனம் கதறிட
கல்வாரித் துயரத்தை இதயம் அனுபவிக்கும்.

தென்றல் தீண்டும் போதெல்லாம் தீயும் தேகம்,-தேன்குரலில்
பூங்குயில் பாடும்போதெல்லாம் ஏங்கும் காளை நெஞ்சம்,-
வான்பரப்பில் வண்ண நிலா உலா வரும்போதெல்லாம்-வாடும்
தனிமையுள்ளம், தேன் மலரைத் தும்பி தீண்டும்போதெல்லாம்-
தித்திக்கும் முத்தப்பூச்சூட தவிக்கும் காதல் நெஞ்சம்.

காதல் இல்லாத உலகில் வாழ்வே கானல் நீராகும்
ஆதாமின் தனிமைத்துயர் நோயாய் நெஞ்சை வாட்ட –இதயம்.
ஏவாளிற்காய் நாளும் பொழுதும் துடித்து இளைக்கும்

இன்னோர் ஆதாமாய்-ஏழை மனம் ஏதேன் தோட்டத்தில்
தனிமையில் வாடித்தவிக்க, ஒற்றை குயிலாய் உள்ளமும்
ஒரு துணைக்காய் கூவி களைக்க, இறைவனோ அர்தநாரீஸ்வரன்

எல்லாம் மாயைதானே?
ஏழை என்தன் வாழ்வும் வீணோ?
பார்வதி இல்லாத் தேவதாஸின் உலகோ
வரண்ட பாலைவனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-07-2023

ஏதேன் தோட்டம்

அந்திவானம், கதிரவன் அள்ளிப்பொழிந்த வண்ணக்கதிர்களால்
நாணிச்சிவந்திட, ஏதேன் தோப்பும் வண்ண மலர்களால் வாசம் வீசிட,
பூந்தென்றலில் ஆடிடும் பூவினங்கள், புதுமலரில் தேனருந்தி
போதையால் சிந்துபாடும் வண்டினங்கள்

கனிகள் சுமந்து களிப்புற்ற பழமரங்கள், கனிந்து
மண்ணை வளமாக்கி கடல் நோக்கி ஓடிடும் நதியினங்கள்
பசும்புல்வெளிகளில் உலாப்போகும் விலங்கினங்கள்
எங்கும் பேரானந்தப் பரவசங்கள்

வாரிக்கொள் என்னை வரிந்து கட்டிக்கொள்
வாசசந்தனமாய் பூசிக்கொள், பூமாலையாய் சூடிக்கொள்
சக்கி முக்கி கல்லாய் உரசிக் கொள் -காதல் தீ பற்றிட
கண்ணாளா காமக் குளிர் காய்ந்து கொள்

வீணையாய் மீட்டிகொள், மோகன ராகத்தில் காதல் சொல்
பேரழகே பெண்ணாகி வரும் ஏவாள் கண்டு இன்புற்றான்,
அழகைத் தழுவி, செவ்விதழ் தேன் பருகி போதையில்
காதல் வேள்வி செய்ய ஆவல் கொண்டான் ஆணழகன்

என் நெஞ்சுக்குள் முப்பொழுதும் பெய்யும் தேன்மழையோ
என் சுவாசத்தை நித்தம் நிறைக்கும் பூங்காற்றோ
என் உணர்வுக்கு உயிர் கொடுக்கும் பேரின்ப உணர்வோ?
மனம் கவிபாட, மையலில் தன்னை மறந்தான் ஆதாம்

கண்டதும் விழிகளில் காதல் தேனூறும்-நெஞ்சிலோ-
நேசம் புதுப்புனலாய் பொங்கிடும், உடலும், மனமும்
இவளைத் தழுவ ஏங்கிடும், உயிரோ நிரோடை கண்ட
கலைமானாய் துள்ளிட என் பெண்மானாய் இவள்
கவிதை தானாய் வந்திட என் தனிமைத்துயர் நீங்கிடும்

என் என்பின் என்பானவள், என் சதையின் சதையானவள்
இறைவன் ஈந்த அன்புத்துணையாள்-நெஞ்சம்
காதல் பண்ணிசைக்க நினைவோ -சோடிகிளிகளாய்
காதலாகி கரைந்து வானில் பறக்க தன்னிலை மறந்த காதலர்

சாலை வழியே வந்த “மதகுருவும்” தம்மை மறந்து நிற்கும்
காதலரைக் கண்டான், காதலில் கரைந்து அத்வைத நிலையில்
அர்தநாரிஸ்வராய் நின்றவரைக் கண்டு கோபம் கொண்டே
“ சமயத்தை” எடுத்தரைத்து காதலைப் பழித்துச் சென்றார்

பின் வந்த “மனித உரிமை காவலரும்”
உணவின்றி-உடையின்றி- வாழ உறைவிடமின்றி
காதல் செய்யும் மானுடத்தின் காவலர் யாரோ?
மனித உரிமை மீறலின் முதல்வன் இவனோ
குற்றம் கண்டே குறை சொல்லிப் போனார்

சட்டம் வந்தது-சம்பிரதாயம் வந்தது ஒழுக்கம் எங்கே?
ஒன’றாய் கூடி மகிழ உரிமை எங்கே
சட்டத்தில் குற்றம் இது, சமூகத்தில் ஒழுக்ககேடு இது
குறைகண்டு கொதித்து வசைபாடியது

மதமும், மனித உரிமையும், மானுட ஒழுக்கமும் குறை சொல்ல
இறையன்பில் நிறை கண்ட காதல் ஜோடி இன்புற்ற மகிழ
ஆண்டவன் சந்நிதியில் -மூடிட ஆடை எதற்கு?-மறைத்திட
காதலில் என்ன பாவம் இருக்கு?

பூரண சரணாகதியே இராஜயோகம்
இறை வார்த்தையே தேவாமிர்தம் என வாழ்பவர்க்கு
உயிர் வாழ-வேறு உணவு எதற்கு?

ஏதேன் தோட்டத்தின் -இன்பரகசியம் இது
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு

மனம் கழிந்தவர், பசிக்கும்போது உண்டார்
தூக்கம் வந்தபோது உறங்கினார்-வாழ்வே
ஸா ஸென்னாக, இயற்கையோடு இன்புற்றவர்
வாழ்வோ ஏதேன் தோப்பு
அன்புதான் இன்பம், அதுவே மோட்சம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-07-2023

இறை நிந்தை



அணைத்து ஆறுதல் மொழிந்த அன்புக்கரங்களையும்,
புல்லும் நோவாது, கல்லில் மோதாது-தூதர்
காப்பார் என்ற திருப்பாதங்களையும்
ஆணிகள் துளைத்திட-கழுமரத்தில் மனுமகன்

தீர்ப்பிடாதீர்கள் -நீங்கள் தீர்ப்பிற்குள்ளாகமாட்டிர்கள
என்றவருக்கோ மரணத் தீர்வை, வருந்திச் சுமை
சுமப்போரே என்னிடம் வாருங்கள்-தேறுதல் நான் தருவேன்
என்றவர் தோள்களில். கழுமரச் சுமை-முதுகிலோ கசைகளின் இசை

உங்கள் மேலாடையை எடுத்துக் கொள்பவர்
உங்கள் அங்கியையும் எடுத்து கொள்ளத் தடுக்காதீர்
மொழிந்தவர்-மேலாடைகளை நான்காய்ப் பகிர்ந்து
அங்கியை சீட்டுப்போட்டு கொள்ளையிட்டு
அரை நிர்வாணியாக்கிய அவலம்

எதிரிக்கும் அன்பு
வதைப்போரையும் மன்னிக்க வேண்டிய செவ்வாய்-
கசப்பைச் சுவைத்திட புளித்த காடி

சத்தியத்தின் சாட்சியம் நான், அன்புள்ளங்களே என் இராட்சியம்
வாழ்த்தொலியும், புகழும் கேட்ட செவிகள் புண்பட-வசை
மூங்கில் தடி செங்கோலாக, முள்முடி மகுடமாக,
கழுமரமோ அரியணையானது

அசுத்த ஆவியையும், மரணத்தையும்,
காற்றையும், கடலையும் கடிந்தவருக்கோ
மெஸியாவானால், சிலுவையில் நின்று இறங்கி வா
உம்மை ஏற்போம் கேலியும், கிண்டலுமானது.

நிந்தைகள் புரிபவர், அறியாமையை அறிந்தவர்
தந்தையை இரந்தார்-தந்தையே, இவர்களை மன்னியும் தாம்
செய்வது இன்னதென இவர்கள் அறியார், மடியும் தருவாயிலும்
வாழ்வும், போதனையும் ஒன்றான மாகருணை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-8.2023

இறைமகனும் நான்கு மனிதர்களும்

தந்தையின் துயரைத் தனயனும் அறிந்தார்
சிந்தை வருந்திட, சீடரால் முடியாத வரத்தை
நொந்து இரந்தவர் பெற்று மகிழ்ந்திட மகனை
குணமாக்கி மனுமகனும் மகிழ்ந்தார்.

தனியாய் வாழ்ந்து, தனிமையில் நொந்தவள்
தன் போர்வையைத் தொட்டே நலம் பெற கண்டவர்,
மகிழ்ந்தே போற்றினார்-மகளே
உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று.

கூட்டம் நடுவே, கூரையைப் பிரித்து
படுக்கையோடு கீழே இறக்கிடும் பாசமிகு உறவுகளின்
விசுவாசம் கண்டு வியந்தவரும், பாவம் பொறுத்தே
படுக்கையைத் தூக்கி நடந்திட பாவிக்கு நலமளித்தார்.

அன்னையின் துயரை அமலனும் அறிவார்
அறிந்தும் அறியாதவராய், அவரைப் புகழ்ந்திட
கடிந்துரைத்தார் "குழந்தைகளின் உணவை
குட்டி நாய்களுக்கு இடுதல் நலமல்ல" தாயே

"குட்டி நாய்களும் குழந்தைகள் சிந்திடும் உணவை
உண்டு பிழைக்கின்றனவே-நலமளிப்பீர் ஐயா
என் மகள் குணம் பெற" தளராது இரந்தவள் மகிழ்ந்திட
"அம்மா உன் விசுவாசம் பெரிது" என்றே- மகனாகி
தாயின் துயர் துடைத்த பெருமானார் இயேசு.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-07-2023

இரும்புச் சிலுவையும் இயந்திரக் கல்லும்

அந்தி மாலை நேரம், அயர்லாந்தில் ஆளரவமற்ற சாலை ஓரம்
புல்மேயும் பசுக்கூட்டம் ஒரு புறம் - சிறுவனைப்
பாலியல் வல்லுறவு செய்யும் பாதிரியோ மறுபுறம்
நீர் வடிய விக்கித்து நின்ற மதகு-தொலைவில்
துக்கித்து சிலுவையில் தொங்கிடும் இயேசுவின் உருவு

விழித்த மலைப் பாம்பாய் விறைத்த குறி, விந்தை துப்பிக்
களைத்து ஓயும் வரை, சிறுவனை உழுது சிதைத்து
காமப்பசியாற்றிய மிருகம், புல்லில் கிடந்த சிறுவனோ
சப்பித் துப்பிய சக்கையான கரும்பு

நடந்தது ஏதென்று புரியாத வயதில்- வலியும், உள்ளம் சிதைந்த உணர்வும்
காலமெல்லாம் மனதில் முள்ளாய் நின்று வாழ்வைச் சிதைத்திட
கண்ணீர் வடியத் தள்ளாடித், தடுமாறி எழுந்து, காற்சட்டையைத' தேடி
அணிந்து-தொலைவில் தெரிந்த சிலுவையை பார்த்து பெருமூச்செறிந்த சிறுவன்

வறுமையின் கொடுமையும்,
அநாதையான சிறுமையும் நெஞ்சை வாட்டிட
பிஞ்சுக் கரங்களால் கண்ணீரை துடைத்தவன்
கடவுளைத் தேடினான்-எங்கும் சூனியம்.

ஆலயத்தில் திருச்சிலுவை வெருளியான காட்சி
அசிங்கப்படுத்திய காமுகன் பாதிரியான மாட்சி
வெறித்து நோக்கிய சிறுவன் கண்களில் கண்ணீர்
விம்மிடும் அநாதை நெஞ்சத்தில் செந்நீர்

மதப்பாதை எங்கும்-கழுவியும் போகாத
இரத்தக் கறைகள்- பாலியல் அசிங்கங்கள்
எரிநரகின் அணையாத தீச்சுவாலைகள்

யார் பெரியவன்? என்ற சீடத்துவ போட்டியில்
முப்பது வெள்ளிக்காசு- முத்தம்-காட்டிக்கொடுப்பு
உத்தமரைச் சிலுவையில் அறைந்து கொன்ற கொலையோ,
இரட்சணிய இயலானது? கிறிஸ்தவப் போதனையானது

இளைஞன் ஸ்டிபனை கல்லெறிந்து கொன்று
அனனியா-சப்ராவுக்கு மரண தண்டனையளித்த
மதவாத நீதி? அன்பு-நீதி- மன்னிப்பு-கருணை
சிலுவையோடு முடிந்த கதையான அநீதி

கிறிஸ்தவம் பரவிட-நன்மையும் தீமையுமாய்
உலகில் பல மாற்றங்கள்
அழிந்த நகரங்கள், நாகரீகங்கள்-மதங்கள்-
சூனியக்காரிகளாய் எரிந்த பெண்கள்-
மிருகங்களாய் வேட்டையாடப்பட்டு-சந்தைகளில்
விலைபோன கறுப்பு அடிமைகள்

சவுல், பவுலாய் மாறிய பயணத்தில்-திருச்சபை
சவுலாய் மாறிய அவலம்-பாதை மாறிய நல்ல சமாரியனும்
குரு, லேவியனைப் பின்பற்றிய துயரம்

ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் ஆயனில்லாத
மந்தையை வேட்டையாடிட-இன்றும்
அதிகாரமோ ஏரோது, பிலாத்து கைவசம்
மதமோ, மதம் பிடித்த அன்னாஸ் கைபாஸிடம்

பரபாசுக்களுக்கோ இன்றும் விடுதலை
இயேசுவுக்கோ என்றும் மரணமே தண்டனை

ஆயர்களே மந்தைகளை அசிங்கம் செய்த கொடுமை
உலகை அதிரவைக்க அம்பலமான உண்மை
திருச்சபை மணலில் கட்டிய வீடான தன்மை

மறைக்கப்பட்ட உண்மைகள்-வெளிசத்திற்கு வந்தே
சோதோம், கோமோராவை நினைவூட்டிட
விக்கித்துப்போன விசுவாசிகள் கூட்டம்

பலத்த கண்டனத்தை-இறைவாக்கினராய்
உரைத்தும் நீதி கிடைக்கவில்லை?-பாப்பரசர்
பிரான்சிஸோ மன்னிப்பை நாடிட-ஜெஸ்தமெனியிலோ
இரத்த வியர்வை சிந்தும் குழந்தை இயேசு

“சிறுவர்களை என்னிடம் வர விடுங்கள்,
அவர்களைத் தடுக்காதீர்”-இயேசுவின் வாக்கு
இன்றும் ஒலித்திட சிறுவர் துஷ்பிரயோகம்
திருச்சபையை நாறடித்த உண்மையானது

வளர்ந்து பெரியவனாகியும் சிதைந்த மனதால்
குலைந்த வாழ்வு-அவலக் கதையை உலகறிய-திருச்சபையே,
இன்று குழந்தை இயேசுவுக்கு மரணத் தீர்வையிட்ட அவலம்
ஏரோதாய் பாலகர்களைப் பழிவாங்கிய துயரம்

பாலியல் பாதிரிகள் கழுத்தில் தங்கச் சிலுவை-
சிறுவர் கழுத்தில் இயந்திரக் கல் விரும்பாத நீதியாக
உண்மையின் கலங்கரை விளக்கம் ஒளி குன்றிட-
பாதை மாறிடும் விசுவாசக் கப்பல்கள்

ஊழல், சிறுவர் துஷ்பிரயோகம் மலிந்திட-உண்மை
அன்பின் உரைக் கல்லான திருச்சபையோ சாரமிழந்த உப்பு
மத இருக்கையில் இன்றும் அன்னாஸ், கைபாஸின் இருப்பு

பாலியல் துஷ்பிரயோகத்திற்குப் பலியான
சிறுவர்களுக்காய் இராக்கேலிக் அழுகை-
இயேசு அகதியும், அநாதையுமான நிலைமை

மரபுவழி மன்னிப்பு அறிக்கைகள்-கண்டனங்கள்
காற்றில் வரைந்த சிலுவைகளோ?.-ஆட்டுத்தோல்
போர்த்திய ஓநாய்களும், கறுப்பு ஆயன்களும்
தண்டனையின்றித் தப்பிட நீதி நூலாம்படைதானோ?

திறந்த விசாரணைக்கு திருச்சபை முன்வருமோ?
பரிகாரம் செய்து மனந்திரும்புமோ?
இல்லை ஒப்புரவாக்கல் திருவுருட் சாதனம் எம்வசம்
அதுவே மாறாத மந்திரம் என ஓதுமோ?

உண்மையின் புரட்சியாளனே மெய்யான மதவாதி
ஏனையோர் மதப்போதையில் மயங்கிட்ட குடிகாரரே
தர்மம் வெல்லும், அதர்மம் தோற்கும் மாறாத நீதி

இயேசு, வத்தின்கானின் தனிப்பட்ட சொத்துமல்ல-நீதியின் மேல்
பசி தாகமுள்ளோர் பேறுபெற்றோர் விண்ணரசு அவர்களதே
இயேசுவின் வார்த்தைகள்-பொய்யுமல்ல-ஆன்மீகம்,
மதம் கடந்து, தன்னை அறிந்திடும் தனி மனிதப் பயணம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-5-2023

இறுதிப் பயணம்.

மூப்புற்று, நோயுற்று, துயருற்று மடியாமல்
இன்புற்று இறையடி சேரும் இனிய பயணமாய்
என் மரணம் அமையத், தந்தையே வரம் வேண்டும்

மகிழ்ந்து நான் மடிய, மாலை வந்ததென்று-உடலும்
ஒரு பூ-வாய் உதிர, காலை மலர்ந்ததென்று
ஆன்மா பூத்துக் களிப்புற
என்னே மெய்யின் பொய்யான மரணம்.

கோடி நட்சத்திரங்கள் வானில் மலர்ந்தாலும்
அழகு நிலா உலா வந்தாலும்
அழகை இரசிக்க இருள் வேண்டும்

இரவும், பகலும் இடையறாது மாறிற மாறி வர
ஓயாது சுற்றும் உலகு-ஒவ்வொரு நொடியிலும் ஓர் உதயம்
ஒவ்வொரு நொடியிலும் ஓர் அஸ்தமனம்

நேர், மறை இணைந்திடத் -தோன்றும்
மின் சத்தியின் ஓட்டம் சிவசக்தி நடனமோ?

எதற்காக வந்தோம்? எதனைச் சம்பாதித்தோம்?
எதை இழந்தோம்? தேடிப் பெற்றதும்-இறுதியில் தேவையற்றதாக
ஆவி போகும் வரை ஆடிய ஆட்டம் வெறும் தெருக்கூத்தாக
மண்ணோடு மண்ணாக மாறிட வாழ்ந்த வாழ்வும் வாழ்வா?

முடி சார்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பலாக
உள்ளுணர்வில் உயர்ந்த பெருமன் புத்தரும், இயேசுவும்
மனித இதயங்களில் அவதார புருஷர்களாய் வாழ
நாம் எங்கே போகின்றோம்.?

உள்ளுணர்வின் உன்னதமாய் இறைவன்
உள்ளுணர்வில் உயர்ந்தால் மனிதனோ இறைவன்
தன்னை அறிந்தவன் இருப்பாய் மலர்ந்தவன்
நானும் தந்தையும் ஒன்றென்றான்
அஹம் பிரம்ம அஸ்மி என்றே ஆனந்தக்கூத்தாடினான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17.06.2023

எது ஜெபம் ?

வார்த்தைகளின் சொல்லாடல்-ஜெபமல்ல
சொல்லியதை திரும்பச் சொல்வதும் ஜெபமல்ல
மணிகளை உருட்டி மனம்-எங்கோ இலயிக்க
மந்திரமாய் ஓதுவதும் ஜெபமல்ல

உள்ளம் ஒருமித்து, ஐம்புலனும் அமைதியில் ஒடுங்கிட
மனம் கழித்து அறிவும், இதயமும், ஆற்றலும் ஒன்றாகி
உடைந்த உள்ளம் உருகிப் புலம்புவது-ஜெபம்.

தந்தை மகன் உறவாகி உள்ளம் உறவாடுவது ஜெபம்
தாய் பிள்ளையாகி-மனம் அன்னையை அழைப்பது ஜெபம்.
உண்மைக்கு சாட்சியமாய் உள்ளம் அனல் கொண்டு எரிய
தீமையின் இருள் கலைய தம்மை எரிப்பதும் ஜெபம்.

ஆலயமணி ஓசையும் ஊமையாக
அருள்மொழி கூறும் பறவைகளும் அஞ்சிப்பறந்து கதறிட
அதிகாலையில் காட்டுக் கூச்சலாய் ஆலயங்களில்
இசையை பழிக்கும் ஓசைகள் மதவேசித்தனங்களே

சுற்றாடலை மாசுபடுத்தும் ஓசைகள்
சட்டத்தை மதிகாத ஆசாமிகளின் பாஷைகள்
அமைதியை நிந்தித்து அயலவனை புண்படுத்தும் செய்கைகள்
வன்முறையின் வடிவங்கள் ஜெபமல்ல


விருந்துண்டு கொண்டாட, முகநூலில் விளம்பரம் அரங்கேற
வீடுகளில் ஓதும் ஜெபமாலை வெற்று ஆடம்பரங்கள்.
வீழ்ந்த மனங்கள் எழுந்திட விருப்போடு
நல்ல சமாரியனாய் கை கொடுப்பது ஜெபம்

உள்ளம் வரண்டு நீர் தேடும் கலைமானாய்த் தவிக்க,
உடைந்த மனம் ஊதாரிப்பிள்ளையாய் துடித்து
தந்தையை தேடி தவிப்பது ஜெபம்.

இருப்பதை பகிர்ந்து இல்லாத
ஏழையை உறவாக்கி
எல்லா மானுடங்களிலும
இறைவனைக் காண்பது ஜெபம்.

பன்றிகளுக்கு முன்னால் முத்துக்களைத் தூவாமல்
பாறை, பாதை, ,முட்செடியில்-விதைகளை வீசாமல்
விழிப்புணர்வில் நிலைத்து, அன்பில் நிலைக்க
தன்னைத் தாழ்த்துவது ஜெபம்.

அறியாமையை விலக்கி, அகத்தை தூயதாக்கி
உள்ளம் பெரும் கோயில் உள்ளுறையும் தெய்வம்
என் தந்தை என்ற உணர்வில் விழித்துக் களிப்பது
அப்பா! தந்தாய் என்றே உருகி அழைப்பது ஜெபம்.



விழிப்புணர்வே ஜெபம்-விழிப்புணர்வே தவம்
ஜெபம் செய்கையல்ல-சிந்தனையல்ல, அன்பின் உணர்வு நிலை
உடைந்த இதயம் குணமாகும் நிலை, அறிவு கழித்து-
இதயம் பொங்கிப் பூரிக்கும் நிலை-

அறிவு கழித்து அன்பு பொங்கிட, ஜெபம் இதயத்தின் மொழி
மனம் அழிய-சும்மா இருக்கையில் சுகம் கண்டு
தூய மனம் மலர்கையில், மழை பொழிய-
மண் செழிக்க, உறங்கிக் கிடந்த புற்கள் துளிர்பதுபோல்
தூய மனம் விழித்து களிப்பது ஜெபம்.

தன்னை அறிந்திட-அகமுகப் பயணம் தொடங்கிட
ஆணவம் கழித்திட-அரும்பு மலராவது ஜெபம்.
இரத்தல் ஜெபமல்ல-இன்புற்று உள்ளம்
இறைவனோடு ஒன்றாவது ஜெபம்

கையில் சாட்டையெடுத்து, வார்த்தையில் சத்திய அனல் தொடுத்து
இருள் கலைப்பதும் ஜெபம், என் சித்தமன்று
உம் சித்தம் நிறைவேறுக, உம் அடிமை நான் என்று
உள்ளத்தின் பரிபூரண சரணாகதி ஜெபம்

வதைப்போரையும் மன்னிக்க வேண்டுவது-ஜெபம்.
இயலாமையின் உச்சத்தில் என் தந்தையே என் தந்தையே
ஏன் என்னை கைநெகிழ்ந்தீர் கதறி, பரிபூரண
சரணாகதியில் அமைதிகாண்பது அபூர்வ தவம்.

தனித்திருந்து-விழித்திருந்து தந்தையின் அன்பில்
களித்திருப்பது ஜெபம், உண்மையும், அன்பும் வாழ்வானால்
வாழ்வே ஜெபம், வாழ்வும் ஜெபமும் வேறல்ல
கல்வாரிச் சிலுவையில் நிதர்சனமான இயேசுவின் தவம்

பரிசேயனா- ஆயக்காரான நான்
இன்றும் சத்தியசோதனைகள்
விழிப்புணர்வு இல்லாத வாழ்வில் விவிலியம்-
ஜெபமாலை-சிலுவை வெற்று அடையாளங்களே!

மந்திரமாய் ஜெபமாலை ஓதுவது ஜெபமல்ல-மாதா சொன்னார்
என்பதும் உண்மையல்ல, அவர் சொல்வதை செய்யுங்கள்
-மாதாவின் மந்திரம், இயேசு கற்பித்த ஜெபத்தை தியானித்தால்
நாமும் இறைமகன், நம்முள்ளே இறைவன் அறிவோம்

அன்பே சிவம், வாழ்வே தவம் அனுபூதியில்
புரிந்தவருக்கே ஜெபம்
இறைவனை அறிந்தவருக்கே ஜெபம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

ஏது மதம்? யாது இறைவன்.?

ஆஸ்தீகன், நாஸ்தீகன், அநாத்மவாதி என்று
மானுடத்தை, மதவாதிகள் பிரித்தார்
சாதியம் வகுத்து, மதச்சண்டைகளால்-காவிகளைப்
ஆன்மீகப் போலிகள் குருதியில் தோய்த்தார்.

இறைவன் இறந்துவிட்டான் சிந்தனையாளர் நீட்ஸேயின் வாதம்
அபினியும், போதை வஸ்துமாய் மதம் கார்ல் மாக்ஸின் கீதம்
நானும் தந்தையும் ஒன்றே-அனல் ஹக் - அஹம் பிரம்ம அஸ்மி
அனுபூதியில் அறிந்து சச்சித்தானந்தத்தில் நிலைத்த ஞானியர்

வாழ்ந்தறியும் உண்மையே இறைவன்-இருப்பது தெய்வீகமே
அன்பு, உண்மை, கருணை , மன்னிப்பு, இரக்கம். ஈகை
மதம் கடந்த இறைதன்மை-அதுவே ஆன்மீகம்
உள்ளுணர்வின் உன்னதமே தெய்வீகம்

மதம் கடந்தவனோ ஆன்மீகவாதி
அறிவோ மூளையின் மொழி ,அறிவைக் களைந்து-
அன்பில் நிலைத்தவர் இறைவனில் மறைந்தார்
ஆணவமழிய தூய மனமாய்-சூனியமாய்-
சத்தியம், சிவம், சந்தரமாய் ஒளிர்ந்தார்

கடந்து உள்ளே போனவனோ கடவுளானான்.
மெய் நிலை அறிந்தவனுக்கு-இறைவன்
அறிவைக் கடந்த ஆனந்த இருப்பு

இருமையில் உழல்பவர்க்கு ஞானமோ கிட்டாத நெறி.
நிர்குண, சகுண பிரம்மம் கடந்தவருக்கே
பிரக்ஞானம் பிரம்மம் , அதுவே சச்சிதானந்தப் பெருநிதி

உன்னதங்களில் இறைவனுக்கே மகிமை-பூவுலகில்
நன் மனத்தவருக்கே அமைதி
உன்னதமும், ஆணவம் கழித்த நன்மனதும் ஒன்றே-
இருப்பாய் -இறையாய் அதுவே -நாமும் அதுவே

மனம் அழிந்த மௌனமே சாந்தி
மரணம் உடலின் நிகழ்வு, ஞானிக்கு மரணமோ
உடலின் கழிப்பு- பிரபஞ்சத்தின் இருப்பு-

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17.06.2023

இதயகீதம்

முப்பதாண்டு கால ஈழ யுத்தம் எண்ணற்ற உயிர்களைப் பலி கொள்ள
அமைதி வேண்டி ஜெபங்கள்-வேண்டுதல்கள், பிராத்தனைகள்.

அச்சத்தில் பிறப்பதோ, ஆணவத்தின் வெளிப்பாடோ ஜெபமல்ல
இரத்தலும் ஜெபமல்ல ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடே ஜெபம்
இதயத்தின் இன்னிசையே-ஜெபம்

இறப்பு நம் கையில் இல்லை
இருப்பதும் போவதும் இறைவன் வகுத்த நிலை
பிறப்பு. இறப்பு எனும் இரு கரை நடுவே
வாழ்வு எனும் நதி பாய்கின்றது.

Believe nothing, no

matter where you read it,

or who said it, no matter if I have said it, unless

it agrees with your own reason and your own common sense-

இயேசுவை விற்றுப் பிழைத்திட, எங்கும் பிரிவினைச் சபைகள் ,
மதவாதம் மானுடத்தை பிரித்திட சத்தியத்தின் குரல்-
சதாகாலமும் அநாதையான நிலை

அகதி-விதவைகளின் அவலம் கண்டும்
இரங்குவார் யாருமில்லை
சிந்திடும் குருதியும்-குற்றமாய்த் தெரியவில்லை
ஐவேளை தொழுகையும் தவறவில்லை

முடிசார்ந்த மன்னனும்-குடில் வாழ் ஏழையும்
முடிவில் பிடி சாம்பலாக, சாதி, மொழி, இன,
நிற மதம் தாண்டிய விதியாய் மரணம்
மணிமகுடத்தின் வடிவாய் கோவிட் 19

ஆண்டான், அடிமை பேதம் கடந்து மரணம் தழுவிட
குணமளிக்கும மதவாதிகள் மறைந்த மாயம்,
ஆஸ்தீகனுக்கும் ஞானம் கிட்டாத நிலை
அமைதி திசை மாறிய பாதையான துன்ப நிலை?

நம்முள்ளே நாம் தொலைத்ததை
வெளியே தேடுகின்றோம்-தொலைத்த
இடம் விட்டு தொலைவில் தேடுவது ஜெபமா?

சுழலும் தர்மசக்கரம் ஓயாது சுழன்றிட
வினை விதைத்தவன் வினையறுத்திட
ஒப்பாரியாய் ஜெபம்?

கிணற்றில் நீர் நிறைந்தே உள்ளது-நம் வாளிகளில்
ஆயிரம் துளைகள்-இறைக்கும் போது
வெற்று வாளி நம் குற்றமா? இறை குற்றமா?

நம்மை நாம் அறிந்திடும் உள்முக யாத்திரையே
பரிபூரண சரணாகதிக்கான மனம் திரும்புதலே ஜெபம்
உனக்கு நீயே ஒளி-உனக்கு நீயே அரண்
விழிப்புணர்வே வெளிச்சம்.

அப்பத்தினால் வாழும் மனிதன்-மரிக்கின்றான்
இறைவார்த்தையினால் வாழ்பவன் உயிர்க்கின்றான்.
வேண்டுதல் எல்லாம் கூச்சலாகிட
வாழ்வு பிச்சையல்ல- பெருங்கொடை

அச்சத்தின் அழுகுரல் ஜெபமல்ல, மெய்சிலிர்க்க மேனி நடுங்க,
உள்ளூறையும் பெருமானை உணர்ந்து போற்றுவது-ஜெபம்.
மனிதன் உலகமெல்லாம்ஆதாயமாக்கி கொண்டாலும்
தன்னை இழந்தால் கிடைப்பது வரமல்ல சாபம்

ஆயுளை நீடிக்க மகா அலெக்ஸாண்டராலும் முடியாது
மரணப்படுக்கையில் அறிந்த மாபெரும் உண்மை
இளமையில் மரணம் மன்னன் கற்றறிந்த பாடம்

வாழ்வும், சாவும் நம் முன்னே-தெரிதல் நமதே
இன்றில்லையேல் நாளை மரணம்
நன்றாய் வாழ்ந்தால்-நமக்கேது மரணம்.

வாழ்வு வருடங்களின் தொகை அல்ல, நேற்று, நாளை
என்று ஏதுமில்லை, இருப்பது இக்கணமே-நிகழ்காலமே
ஏனையவை மனதின் மாயத் தோற்றங்களே

என் தேவனே என் தேவனே, ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?
இயலாமையின் கூக்குரல், இருப்பின் தனித்துவமான மௌனம்
இயேசு, கிறிஸ்துவாகிட இறை அருளிய புதுமையான வரம்

அவர் ஜெபம் கேட்கப்பட்டது, கேட்டதிலும் மேலானது
அருளப்பட, அக மலர்தல் நடந்தது, அதுவே மா புதுமை
வழியும், உண்மையும், வாழ்வும் ஒன்றானது

கதிர்கள் மொட்டுக்களை சுடுவதில்லை
மலர்தலுக்கு தூண்டுகின்றன
சிற்பியின் உளி கல்லை சேதப்படுத்துவதில்லை

சிறைப்பட்ட சிற்பம் விடுதலை பெற அருள்கின்றது
மரணம் மகத்தான விடுதலை
உன்னுள் இருப்பது வெளியிலும் உள்ளது
அறிந்தால் ஆனந்தம்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடக்கின்றது-
எது நடக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
பக்தனின் திட நம்பிக்கை, நன்றியுணர்வே ஜெபம்
அன்பின் ஆனந்த வெளிப்பாடே-ஜெபம்

புன்னகையே உன் மகிழ்சிக்கு காரணம்
மகிழ்ச்சியே-பலவேளை புன்னகையின் ஆதாரம்
சச்சித் ஆனந்தமே இறைவன்
அழுகை ஒப்பாரி, புலம்பல் எல்லாம் ஆணவத்தின் நாதம்
ஆனந்தம், புன்னை நன்றி-வாழ்வின் கீதங்கள்

வாழ்வே இறைவன், வாழ்விற்கு சாவு தெரியாது.
வானில் திசைகளில்லை-மனம் படைக்கின்றது
உண்மை ஒன்றே
கடந்து போவோம்-கடவுளாவோம்
அன்பினால் நிரம்புவதே உண்மையான ஜெபம்

சப்பே தத்தா பவங்க துதி தத்தா
சகல உயிர்களும் நலமாய் வாழ பிராத்திக்கின்றேன்
லோக சமஸ்தா சுகினா பவந்து
இன்பமே சூழ்க எலலோரும் நலமே வாழ்க

வீணை நான் -மீட்டும் கலைஞன் அவன்
நாதமும் அவனே-ஏழு ஸ்வரமும் அவனே
வெற்றுப் புல்லாங்குழல் நான், வேனுகானம் அவன்
சும்மாயிருத்தலே-
மனத்தில் ஓய்ந்திருத்தலே ஜெபம்
மற்றவை வெற்று வார்த்தைகளே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

ஏவாள்

மூப்பும், பிணியும் வாட்டிட-வாடும்
மலராய், ஆதாமின் காதல் மலர் ஏவாள்
மலர்ப் பஞ்சணையில் படுத்திருந்தாள்
பூ விழிகள் மூடி பூவாய் உதிரக்காத்திருந்தாள்

மரணம் வா என்றழைக்க-ஆதாம் மனமோ,
ஆருயிரே என்னை விட்டுப் பிரியாதே எனத்துடிக்க
சுவாசமோ தந்தவனைச் சரணடையத் தவிக்க
விண்ணும், மண்ணும் சோர்ந்து நிற்கும் நேரம்.

கண்ணீர் மாலை தொடுத்து, கரங்களால் இனியவளை
அணைத்து , என் என்பின் என்பானவள், ஊனில் ஊனானவள்,
இணைபிரியாத் தோழி இறைவன் தந்த துணைவி-
என்னைப் பிரிவதா? தனிமைத் துயரில் நான் மூழ்குவதா?

நீயில்லா உலகோ நிலவில்லா வானமடி
உனைப்பிரிந்து என் உயிரும்-ஒரு கணமேனும்
வாழாது இது திண்ணமடி, உயிர் துடிக்க -பூங்கரம்
எடுத்து மார்பில் வைத்துப் புலம்பினான்

துடிக்கும் என் இதயம், உன் மீளாத்துயிலை தடுக்கட்டும்
தவிக்கும் என் உயிரும் உன் இறப்பை தடுத்து நிறுத்தட்டும்
இல்லையேல் உன்னோடே போகட்டும்.

அறிவுக்கனியை என்னோடு பகிர்ந்த புரட்சிப் பெண்,
துணைவியும் தோழியும், தாயுமான புதுமைப் பெண்
களைத்து கண்மூடிப் படுத்திருந்தாள்
காலனின் அழைப்பிற்காய் காத்திருந்தாள்.

தந்தையாம் கடவுளையும்-தாய் வீடாம்
இன்பவனத்தையும் துறந்து, வனம் வந்த முதற் சீதை,
மீளாத்துயில் கொண்டு களைப்பாற காத்திருக்கும் கோதை
பொன்மேனி வாடிட, பூவிழிகள் மூடி படுத்திருந்த ராதை

காயீன், ஆபேல் என வாரிசு தந்த தாய்மை
காயீன், ஆபேலை கொன்றபோது துடித்த பெண்மை
மரணம் வெல்ல முடியாத உண்மை என்றானபோது
அழுவதனால் ஆவது ஏதுமில்லை என்ற அம்மை.

அண்ணன், தம்பியை கொன்றபோது-சாவின்
பயங்கரம் புரிந்தது, குருதியின் நிறம் தெரிந்தது
காயீனும் பிரிந்தபோது, பெற்றவயிறு துடித்தது
ஆசையின் கோரவடிவத்தை மனம் அறிந்தது.

மண்ணோடு போராடி நான் உழைக்க
மகிழ்வோடு பூத்தொடுத்து மாலை கட்டி
மங்கையவள் என் வியர்வை துடைக்க,
அள்ளியணைத்த பாவையோ ஆனந்தப் போதை

கார்குழலும், கயல்விழிகளும் கட்டியணை, இதழ்களை
கவ்வியணை எனக் கவி பாட, மலைத்தேனும் தேவியிவள்
முத்தத்திற் ஈடாகாது, பஞ்சணையும், மலர் மஞ்சமும்
மாதிவள் பூமடிக்கு இணையாகாது-பூவாசமும்
பூந்தேவியின் சுகந்தத்திற்கு நிகராகாது.

மகிழ்ந்து சிரித்து வாழ்ந்த வாழ்வில்
மரணம் நெருங்க, ஆண் மனம் நொருங்கிட
ஓய்ந்து களைத்து படுத்திருந்தாள்
உறவு சொல்ல இறைவன் தந்த துணைவி.

குடிலையும் மாளிகையாக்கி மலர்மஞ்சத்தில் நாளும் உறங்கிட
பூப்பறித்து மாலை தொடுத்த பூவை, கடந்த வந்த பயணத்தில்
என்னோடு கல்லிலும். முள்ளிலும் நடந்தவந்த தோகை,
செவ்விதழ்களிலோ என்றும் வாடாத புன்னகை

இதழ் “கள்” பருகியும் இவள் இதழ்களில்
என்றும் தீராத காதல் மதுவின் பல்சுவை
கண்ட முதற் பொழுதே காதல் பொங்கிட,
கவிதை பாடிய காளை மனதிலோ முக்கனிச் சுவை

என் பாதி நீயடி, உன் பாதி நானடி, நீயின்றி நானில்லை
இதுதான் நிஜமடி, மலர்ப் படுக்கையில் நீ உறங்க
மரணப்படுக்கையில் என் மனம் தவிக்க, வாட்டும் தீயாய்
கொடுந்தனிமை ஏனடி என் கண்மணி

கூவும் குயிலாகி, குயிலோடு கவி பாடியவள்,
ஆடும் மயிலாகி, கலாபமயிலோடு ஆடி வாகை சூடியவள்,
கலைமானோடு துள்ளி விளையாடிய புள்ளி மான்
மலையருவியில் நீராடி வண்ண மலர்கொடி உடுத்திடும் பூங்கொடி
வாடிய பூங்கொடியாய் ஆனதென்ன? என் மனம் நோவதென்ன?

மலர்களும் நாணிடும் வண்ணமலர்
இதழ்களால், இதழ்களில் கனிரசம் தந்து
காதல் போதை தணித்திடும் மதுமலர்

ஆறாம் அறிவோடு நிமிர்ந்து நடக்க-ஆசானாய்
அடி எடுத்து கொடுத்த கலைமகள்
துணையாய், தோழியாய், தாயாய், தாரமாய்
அருகிருந்த அன்புறவு, பிரிவு சொல்ல
நெஞ்சிலே விழிக்கும் சோக எரிமலை.
மனதை அச்சுறுத்தும் பிரிவின் சுனாமியலை

என் உயிரே நீ போனபின்
இறகொடிந்த பறவை நான்
வான் நிலவே உனை பிரிந்தபின்
வடிவிழந்த இரவு நான்

கொட்டும் மலையருவியும் கோவென்றே கதறி வீழ
குமுறி கடல் அலைகளும் கரை பாய
வான் மதியும் முகம் கறுத்ததடி
வந்து வீசும் தென்றலிலும் சோகத்தின் வெம்மையடி

வண்ணமலர்களும், வான் நிலவும், உன் முகம் காட்ட
முக்கனியும், தேனும், உன் இதழ் சுவை கூட்ட,
பாடும் குயிலும், ஆடும் மயிலும் ஓய்ந்து தம் சோகம் காட்ட,
பூத்த மலர்களும் வாடி உதிர்ந்ததடி, பூவே நீ சூடவில்லை என்று
கனிகளும் கருகி விழுந்ததடி, காதல் கனியே
உன் இதழ் சுவைக்கவில்லை என்று.

அலையில் விளையாடி, கரையில் மணல் வீடு கட்டி
மலைத்தேனெடுத்து மகிழ்ந்து விருந்தாடி
மலர் தொடுத்து மாலை கட்டி. இடைதொடுத்து-மேகலையாய்
கையணிந்து வளையல்களாய் கொண்டாடிய காலம் போனதடி

அன்ன நடையும், மின்னல் இடையும் கண்களை பறிக்க
கொவ்வை இதழ்களில் தேனும் இனிக்க,
குறுநகையும், வேல்விழிகளும் என்னைக் கொல்ல
பூங்குயிலாய்ப் பாடும் தேன்மொழி மௌனமானதென்ன

காமனை வருத்தும் பேரழகு,கவிஞனாய் என்னை
மாற்றிய பெண்ணழகு, சூடிட இறைவன் தந்த வாடாத பேரழகு
வாடுவதென்ன, என் மனமும் சோர்வதென்ன?
என் பொன் வசந்தமும், கோடையாய் மாறியதென்ன?

எடுத்த அடியில் இதயம் துடிப்பை கூட்ட
அடுத்த அடியில் சுவாசம் மூச்சை மூட்ட
அழகின் இலக்கணமோ, ஐம்புலனும்
ஆறறிவும் மயங்கும் புதுச்சுவையோ இவள்

கடல் அலைகளும் காணும்போதெல்லாம்
கொட்டு மேளம் கொட்ட-கொண்டாடிச் சேர்ந்த உறவு
கண் மூடி களைப்பாறுது, வாழ்ந்தது போதுமென்று.

கண்மணி-உன்னோடு வாழ்ந்த காலமெல்லாம் வசந்தமடி
வாட்டும் உன் பிரிவோ நாளும் தீய்க்கும் கோடையடி
உனை பிரிவே என் நரகு-உத்தமியே
உன் உறவே என் சொர்கவுலகு

நீ உறங்க, என் உயிரும் ஒடுங்குதடி
நீயில்லா உலகும் ஒளியின்றி சுருங்குதடி
எரி நரகாய் உன் பிரிவு என்னைத் தீய்க்குதடி

நான் உறங்க மடி தந்த நந்தவனம்
நலம் வாழ துணையாய் வந்த இன்பவனம்
வாடிக்கிடப்பதென்ன அன்புறவே-என்
வாழ்வும் பாலையாய் மாறிப்போவதென்ன?

நீயில்லா உலகில் என் வாழ்வு நிலைக்காது
நிலவில்லா இரவில் அல்லி மலராது
வண்ணமலரே, என் சுவாசக்காற்றே நீ உறங்கு
உன் அருகே நானிருப்பேன்,
என் துணையே, மரணமும் நம்மைப் பிரிக்காது.

கள்ளிருக்கும் மலர்சூடிய கார்மேகக் குழலும்
வெள்ளிமலர் சூடி வாடியிருக்க, நீலோற்பல விழிகளும்
நீள் இரவு வந்ததென மூடி மீளாதுயில் கொள்ளக் காத்திருக்க,
நீர் கசியும் விழிகளுக்குள்-நெஞ்சம் பனியாய் உருகிக் கரைந்திருக்க
கண்ணயரும் காதலியை கண்ணோக்கி
விண்ணமர்ந்த இறைவனை மனம் வேண்டியது

தேவன் தந்த துணையும், தேவதையுமானவளைப் பிரியும்
நேரம் வந்ததென மனம் சொல்லியழ-விலக்கப்பட்ட கனியின் சுவையும்,
விஷமாய் சாவில் முடிந்திட, நீயில்லாத உலகு நிலவில்லா வானமடி
உன்னை பிரிந்து என் உயிரும் ஒரு கணமேனும் வாழாது திண்ணமடி
அன்பே, உன் பிரிவே என் மரணமடி, உன் வாழ்வே என் ஜனனமடி

விழுதும் தளர்ந்திட- விருட்சமும் வீழ்ந்தது
வாழ்ந்தது போதுமென்று, ஒன்றாய் வந்த சொந்தமும்
ஒருவரில் ஒருவராய் கலந்த இன்பமும்
உலகில் முதற்காதலும்-ஒன்றாய் உறங்கிடப்போனது

காதல் முடிவதில்லை-அது
பிரிவிலும் தொடரும்- பிரிக்க முடியாத உறவு

அன்னையும். தந்தையும் ஒன்றாய்த் தூங்கிட
அழும் விழிகளோடு அன்பு மகன் சேத்.

ஆண்டவனும் தன் படைப்பை பார்த்தான்
விழிகளில் முட்டிய நீரை மெல்லத் துடைத்தான்

வாழ்வின் முடிவல்ல மரணம்-
நெடும் பயணத்தின் புதிய தொடக்கம்
புத்துடை மாற்றுவதுபோல் ஆன்மா
புத்துடல் மாற்றி தொடரும் பயணம் ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

ஞானம்

நான் நானாக இருந்தபோது, முள்ளாய்க் கிடந்தேன்
நான் நீயானபோது வாசமலராய்ப் பூத்து மகிழ்ந்தேன்

முத்தமழையில் நனைந்து, மோகத்தீயில் குளிர்காய்ந்து
பித்தனாய் அலைந்தவன், சித்தமழிந்த நிலையில்
சிவனானேன்

வேதம் புதிதல்ல-வழியும் புதிதல்ல
தந்திரா காட்டியது, வெறுமைக்குள் முழுமை

காமம் கடந்தபின், மோகத்தீ அணைந்தபின்
வேள்வித்தீயில் என்னை ஆகுதியாக்கி
உன்னில் கரைந்தேன்

பிரபஞ்சகானமே உன்னில் இலயிக்க உனதானேன்-
இறகுகள் முளைத்திட எல்லையில்லா பெருவெளியில்
எல்லாம் இன்பமயமெனறு எழுந்து பறக்கினறேன்

பாவம்

கங்கையும் பாவத்தைப் போக்காது
ஹஜ்-யாத்திரையும் கர்மவினை போக்காது
திருவருட்சாதனங்களும் பாவத்தைப் போக்காது-
சிந்தையழிந்து வாழ்வு சிவமானால்.
பாவம் போகுமே, வாழ்வு சிறக்குமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

ஞானத்தேடல்

அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி
தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து
என்னைத் துலக்கமான அம்பாக்கி
தமது அம்பறாத்துணியில் மூடிவைத்தார்.

அருளும் திருவும் இணைந்த அருட்பணியாளர்களே
அருள் காணவிடினும்-ஐயமின்றித் தங்களில் திரு காணும்
பாக்கியம் எங்களுக்கு, முக்தி நோக்கி உங்கள் பயணம்
பக்தி யோகத்தில் எங்கள் தியானம்

உங்கள் ஆன்மீக வெளிச்சத்தால்
எங்கள் இருண்ட பாதைகள் ஒளிபெற்றன?
உங்கள் அடிச்சுவடுகளை தொடர்வதால்
கரையேறலாம் என்ற நம்பிக்கை எம் வாழ்வில்

நீங்கள் முந்திப்போனதாலோ- இல்லை
எம் பயணம் பிந்தியதாலோ
எங்கள் விசுவாசப் பயணத்தில் பெரும் தளர்ச்சி

பிள்ளை பெறாத உதரங்களும்
பாலூட்டாத கொங்கைகளும் பேறுபெற்ற காலமிது
யுத்தத்தின் இரத்தம் எங்கள் இல்லங்களைச் சிவப்பாக்கிட
ஊரெங்கும் ராக்கேலின் ஓயாத புலம்பல்

உறவுகளும், உடைமைகளும் உருவழிந்துபோனதால்
எங்கள் நம்பிக்கைகள் உருக்குலைந்துபோயின.
உங்கள் பலிகளால், பாவம் போக்கும் சடங்குகளால்
எம் மனக்காயங்கள் ஆறவில்லை

கடவுள் ‘‘பற்றி’’யே பேசும்- நீங்கள் இன்றும்
கடவுளைப் பற்றியே பேசுவது சலிப்பூட்டுகின்றது.
கடவுளைப் ‘‘பற்றியவன்’’ கடவுள் பற்றி பேசுவதில்லை
அவன் வாழ்ந்து காட்டுகிறான்

பேரொளியின் பெரும் பிரகாசத்தை, அறிவெனும் சிறு அளவுகோலால்
அளந்திடும் இறைவல்லுனரே, இன்றும் சிப்பியினால்
சமுத்திரத்தை சிறு குழிக்குள் நிரப்புவது சாத்தியமா?
புத்தர் பெருமான் கடவுள் பற்றிய கேள்விக்கு
காத்த மௌனம் அர்த்தமுள்ளது.

அர்த்தமுள்ள மௌனத்திற்கு, நீங்கள் சொல்லும்
ஆயிரம் வியாக்கியானங்களும் பெருமான் புத்தர்
ஒரு நாத்திகர் என்ற கோஷங்களும் வெற்றுச் சத்தங்களே.
நாறிடும் ஆத்திகவாதத்தின் கூச்சல்களே.

அறியாமை இருளுக்குள் நீங்கள் ஏற்றிய அறிவுச்சுடர்களினால்
“பன் முகத் திருச்சபைகளின் முகமூடிகள் கிழிபட்டதுண்டா?
பிரிவினைச் சபைகளின் சுவர்கள்கள்தான் தகர்க்கப்பட்டனவா?”

யூதர்கள் முறிக்காத- இயேசுவின் எலும்புகளை-ஆசையினால்
முறித்து பிரித்து ஆயிரம் சபை வளர்க்கும் அறிஞர்களே-
இன்னுமேன் ஒற்றுமையின் அர்த்தம் புரியவில்லை
யார் பெரியவன் என்ற விவாதம் உங்களிடையே ஓயவில்லை?

நீங்கள் ஒருவருக்கு ஒருவர் காட்டும் அன்பே -நீங்கள்
என் சீடர்கள் என்பதற்கு அடையாளம் எனக் கிறிஸ்து கூறியிருக்க
வட அயர்லாந்து, புருண்டி, தென்னாபிரிக்கா இலங்கை-பொஸ்னியா
என உலகின் பல பாகங்கள் கிறிஸ்துவத்தை தாண்டி
சாதி இன மொழிகளால் பிளவுபட்ட அவலமதான் ஏனோ?

எங்களைப் பிளவுபடுத்திட, “ஓசான்னா” பாடி ஒரு கூட்டம்
ஆர்ப்பரிக்க இன்னும் “உங்கள் கட்டளைகளை”
சுமந்து நடந்திட ஒரு “கழுதை கூட்டம்” உண்டென்பதை
அறிந்திட- எம் நம்பிக்கை நலிகின்றது.

தந்தையின் ஆலயமுன்றலில், கடைவிரித்த ஆயிரம் சபையில்
சாரமற்ற உப்பையும், பரிசேயரின் புளிப்புமாவையும்
காய்காத அத்திமரக் கன்றுகளையும் விற்பது விபச்சாரம்

நீங்கள் சுண்டு விரலாலும் தூக்காத சுமைகளினால், பிறர்
முதுகெலும்பை வளைப்பதில் உங்களுக்கு என்ன சுகமோ?
வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாய், அகக் குருடர்களாய்
பசுத்தோல் போர்த்திய ஓநாய்களாய்-இயேசு விளித்த
இறைமந்தையை மேய்ந்திடும்” கொள்ளையர் கூட்டம் நீங்களோ?

அருட்திருக்களே, அருட் கலாநிதிகளே
நீங்கள் இயேசுவின் நண்பர்கள்தான், ஐயமில்லை
ஆனால் இன்றோ-நீங்கள் “செத்துப்போன இலாசர்கள்”
நீங்கள் உயிர்ப்பிக்கப்படாவிடில் வாழ்நாளெல்லாம்
கல்லறைக்குள் புழுக்களும் பூச்சிகளும்
அரித்திட அழுகி நாறிடும் பிணங்கள்

ஊரெங்கும் ஆயிரம் திருச்சபைகள், இதில்
சபை மாற்றும் பிரச்சாரமோ
கட்சிமாறும் அரசியல்வாதிகளுக்கு
கவர்சியூட்டும் புதுப்பாடங்கள்

நல்ல சமாரித்தன் உவமையில், குருவையும்,
லேவியையும், இதயமற்ற-மனிதநேயமற்ற
பாத்திரமாக்கிய இயேசுவின் படைப்பு
“ மதம்பிடித்த மதத்திற்கு” விடுத்த அறைகூவல்

சாதி, மத,இன, மொழி பேதங்களை “கடந்த இறைவன்”
பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றார்
அன்பே சிவம், மனித நேயமே ஆன்மீகம்

மதப்பயங்கரவாதம், விவாகரத்து-கருச்சிதைவு,
ஒருபால் திருமணம், சிறுவர் துஷ்பிரயோகம்,
தன்னினச் சேர்கையாளரின் குருத்துவ அபிஷேகம்
பெண் குருத்துவத்திற்கு தடை, யுத்தம்
என நீண்டு விரியும் பிரச்சினைகள் உலகில்

இறைவார்த்தையை உதாரணம் காட்டி அஞ்ஞானத்தால்
உண்மைக்கு பல முகங்கள் காட்டும் “பிரம்மாக்களே”
நீங்கள் பொய்மையை நியாயப்படுத்தும்போது
சத்தியத்தை நிர்வாணமாக்கி இன்றும் -இயேசுவை
சிலுவையில் அறையும் தலைமைக் குருக்களே

எரியும் டயர்களில், இளைஞர்களின் தகனப் பலிகள்
தொடர்ந்தபோது, பேதுருக்களே அரசமாளிகையில்
அச்சக் குளிர்காய்ந்து-மௌனத்தால்- “விடுதலையை”
மறுதலித்த காலம் சேவல் கூவாத நேரமோ?

உங்கள் போதனையில் மணக்கும், மத- நாற்றம்
மதமாற்றத்திற்கான புதிய பஞ்சதந்திரமோ?

அதிகார மமதையால், பிரிவினையை உருவாக்கி
உச்சத்தில், வெற்றுக் களஞ்சியங்களை இடித்துப்
பெரிதாய் கட்டும் வியாபாரிகளே, இது உங்கள் இறுதி இரவு

விடியல் உங்களுக்கில்லை தட்டும் இயேசுவிற்கு
இதய கதவுகளை நீங்கள் திறக்கும்வரை
உதயத்தின் புத்துயிர்ப்பு உங்களுக்கில்லை செத்த இலாசர்களே
-இயேசு உங்களை புதுவாழ்விற்கு அழைக்கும்வரை

அங்கி தரித்து, அபிஷேகம் பெற்று “குருத்துவ பட்டம்”
பெற்றவரெல்லாம் “குருக்களல்ல”
பட்டங்கள் யாரையும் “குரு” ஆக்க முடியாது

ஞான விளக்கை, ஒரு தலைமுறையிலிருந்து
மறு தலைமுறைக்கு எடுத்துச் செல்பவரே மெய்யான குரு
உண்மையான துறவி- (லொப்ஸ்ரம் ரம்பா)
ஏனையோர் எல்லாம் காவி சுமக்கும் போலிகளே
கற்ற மந்திரம் ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைகளே

மனமாசுக்களை நீக்கி, ஒழுக்கத்தில் நிலைபெற்று நின்று,
தன்னடக்கமும் மெய்யுணர்வும் ஒருவர்
பெற்றிருப்பாரேயானால், திண்ணமாக அவரே
சீவர ஆடையுடுக்கத் தகுதியுடையவர் ஆவார்.-
(தம்மபதம்-யமகவர்க்கம்-10)

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

வழியும், உண்மையும், வாழ்வும் நானே


எல்லா தர்மங்களையும் அறவே விட்டு விட்டு,
என்னை மட்டுமே சரணடை, நான் உன்னை
எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன், வருந்தாதே-
(பகவத் கீதை-மோட்ச சன்னியாச யோகம்-18-66)






உனக்கு நீயே ஒளியாகிப் போ-அப்போ தீப பவ-
புத்த நிலை உன்னுள்ளே
ஆபிரகாமிற்கு முன் “ நான்” இருக்கிறேன்
வழியும், உண்மையும் வாழ்வும் நானே
என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை-
(யோவான் 14-6)

ஆணவம் கடந்த விழிப்புணர்வின்,
உள்ளுணர்வின் அதி உன்னத நிலையே “நான்”
ஆன்மா , பிரம்மம், சூனியம்





விழிப்புணர்வெனும் பெருங்கடலில் எழுந்த பேரலைகளாய்
பெருமான்கள் கிருஷ்ணன், புத்தர், இயேசு கிறிஸ்து
அலையும் கடலும் ஒன்றே, அவர்கள் காட்டிய பாதையும்
ஒன்றே “விழிப்புணர்வே”

நான் என்பது நபரல்ல-விழிப்புணர்வின் அதி உன்னத நிலை-
சகுண பிரமம்மத்தில் அவதார புருஷர்கள்- நிர்க்குண பிரம்மத்தில்
எல்லோரும் ஒன்றான அதிசயங்கள்

மனம் கழித்து-இருமை கடந்து, முக்குணம் ஒழித்து
உன்னத விழிப்புணர்வை அடைந்தால்
ஆன்மா நீ-பிரம்மம் நீ-சூனியம் நீ





மதவாதிகளோ “மதங்களைப்” பற்றி நிற்கின்றார்
மெய்யறிந்த ஆன்மீகவாதிகளோ-மதம் கடந்து
அஹம் மிரம்ம அஸ்மி -அனுபூதியில் சுவைக்கின்றார்


உன்னை உன்னாலேயே உயர்த்திக்கொள்
உன்னை இழிவு படுத்தாதே, நீயே உனக்கு நண்பன்,
நீயே உனக்குப் பகைவன்- (பகவத் கீதை -தியான யோகம் 6-5)

பிக்குகளே! “நான்” என்கிறதை நீங்களே
ஆராய்ந்து பாருங்கள், அதை நீங்களே நீக்குங்கள்.
பிறகு, நீங்களே உங்களைக் காத்துக்கொண்டு
சுகமாக வாழ்வீர்கள்-(தம்ம பதம், பிக்கு வர்க்கம்-379)


மதம் கடந்தவன் ஆன்மீகவாதி
அன்பே அவன் இறைவன்-சத்தியமே அவன் பாதை
என்றும் சச்சித் ஆனந்தமாய் அவன் இருப்பு
பிரக்ஞானம் பிரம்மம்-அவன் களிப்பு



அன்பும், உண்மையும் வாழ்வானால்
அதுவே இறை விரும்பும் மெய்யான அகவழிபாடு
ஞானத்தில் ஒளிர்ந்து, கருணையால் மிளிருங்கள்
உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்
பெருமான்களின் மாறாத போதனை





ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி
மெய்பொருள் ஒன்று, அதற்கோ பல பெயர்கள்



உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை
பூவுலகில் நல்மனத்தவருக்கு அமைதி
கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி
உள்ளுணர்வின் உன்னத நிலையே நல்மனது

தூய மனத்திற்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு
நல் இதயமே இறைவன் வாழும் ஆலயம்
மகிமையும், அமைதியும் நம் உள்ளே
அஹம் பிரம்ம அஸ்மி- தத்துவமஸி
சத்தியம், சிவம் சுந்தரம் நம் மெய்யான இயல்பு





எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
பரிபூரண சரணாகதியே-இராஜயோகம்

ஆணவம் கழித்திடும் அதிசய மார்க்கம்-சிலுவையில்
வேதனையின் உச்சத்தில் இயேசு பெருமானின் பரி பூரண சரணாகதி
இயேசு, கிறிஸ்துவாய் மலர்ந்ததோ பெருநிதி (Christo Genesis)



ஸத்தியான் நாஸ்தி பரோ தர்மா-
(உண்மையை கடைப்பிடிப்பதைவிட மேலான தர்மம் ஏதுமில்லை)

There is No GOD higher than the TRUTH-Mahathma Gandhi
Love rejoices in TRUTH-St.Paul
"Amicus Plato, sed magis amica veritas"
"Plato is my friend, but truth is a better friend to me than he is"   Aristotle
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26.08.2023

இறைவன் இருக்கின்றானா?

படைத்த மானுடத்தை பரப்பிரம்மத்தால்
திருப்திப் படுத்த முடியவில்லை-வருந்தியது?
வடிவங்கள் பல எடுத்திட-அவதாரம் என்றார்

கிருஷ்ணனாய் வந்தபோது வைஷணவம் தோன்றி
வட கலை, தென் கலை பிரிவினை வளர்ந்தது
சைவ-வைஷணவ பூசல்களால் மறைந்த ஹரி ஹரன்,
கற்சிலையாக்கி வளர்ந்த மதவாதம்

ஞான புத்தனாய் வந்தபோது நாஸ்தீகன் என்றார்
ஹினாயானம், மகாயானம் எனப் பிளவுபட்டார்

எரியும் முட்செடியில் இருப்பவர் நாமே என்றவர்-உலகுய்ய
மகனை அனுப்பியபோது இறைமக்கள் நாமே என்ற யூதம்-
மனுமகனை நிந்தித்து சிலுவையில் அறைந்து கொன்ற மதவாதம்

அதிகாரப்போட்டியில் கிறிஸ்தவம்
பிரிந்து பல்லாயிரமானது
தமக்குள் போராடி ஒற்றுமையிழந்து
சாரமற்ற உப்பாய் மாறுது?

இஸ்லாம் பிறந்து- நபியும், அலியும் மறைந்திட-
தொடங்கிய ஷியா, சுன்னி போர் இன்றும் தொடர்ந்திட
அமைதியின் மதம் அமைதிக்குப் பஞ்சம்?

இறுதி வேதம் அல்குரான், இறுதி நபி முகம்மது
இனி ஒரு வேதம் இல்லை இனி ஓர் நபியும் இல்லை
இறைவனை ஏளனம் செய்யுது?

மதப் பயங்கரவாதம் மானுடத்தை வருத்திட
அன்பின் பாதையில் கலையாத இருள்-சனாதன தர்மத்தில்
தீண்டாமையைக் காத்திட சங்கராச்சாரியின் குரல்

நாமே நமக்கு ஒளி சமண பௌத்தத்தின் சாத்வீக யாத்திரை
இறைவன் எதற்கென்ற முனிவனோ பதஞ்சலி , கடவுள் இறந்து விட்டார்
சிந்தனையாளன் நீட்ஸேயின் அஞ்சலி, அபினியும், போதையுமாய்
மதங்கள, பாட்டாளிகளின் தோழன் கார்ல் மாக்ஸின் குரல் ஒலி

கடவுளை மறந்து ஆஸ்தீக மதங்கள் வாழ
கடவுளை மறுத்து நாஸ்தீகம் வளர
கடவுளோ மனித இதயத்தில் ஒளிந்து மறைந்திட
அன்பே சிவம் அனுபூதியில் அறிந்தவர் யாரோ?

மனமழிந்தால் சுதந்திரம், தூய மனமே இன்பவனம்
உண்மையே உங்களுக்கு விடுதலை அளிக்கும்
புத்தர், இயேசு பெருமான்களின் மாறாத போதனை.

மனம், வாக்கு காயம் அமைதியில் ஓய்ந்திருக்க-
செயலற்று சும்மா இருக்கையில்-காலம் கனிந்திட
புல் தானாகவே முளைகின்றது.“ஸா ஸென்”

இருப்பாய் இருந்தது, விழிப்புணர்வில் சித்தாய் நின்று
பரவெளியில் ஆனந்தக் கூத்தாட-சச்சிதானந்தமே-
சித் அம்பலம்-சித் அம்பர இரகசியம் இதுவே

இறையரசு உங்களுக்குள்ளே-விழிப்புணர்வே வழி
எளிய மனத்தவருக்கே இறையரசு
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
இயேசுவின் பொன்மொழி.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-5-2023

இறைவன்

நெஞ்சில் சிலுவைதாங்கி, நெற்றியில் நாமம் தரித்து
பூணூல் போட்ட தேகத்தில், திருநீற்றால் கோடுகள் போட்டு
உச்சியில் தொப்பி தரித்து, ஊரழைத்து தொழுதாலும்-இறைவன்,
காசி-இராமேஸ்வரத்திலில்லை, அழுகைச்சுவரிலில்லை
அல்அக்ஸா பள்ளிவாயிலில்லை, காஃபாவிலில்லை

உன்னுள் உறையும் தேவனை
“உண்மையாய்த்” தேடுவாயனால்
“உண்மையில்” காண்பாய்
“உண்மையாய்” காண்பாய் மானுடா

இறை தேடல்

பட்ட மரம் தளைக்குமோ?, சுட்ட மண் ஒட்டுமோ?
ஈகையில்லாச் செல்வனுக்கு புகழ் கிட்டுமோ?
வாகை சூடா மன்னன் வலி நிலைக்குமோ?
வாடிய பூக்களை வண்டுகள் நாடுமோ? பாடுமோ?

வற்றிய குளத்திலும் கொக்குகள் நிற்குமோ?
இறை நேசமில்லா வாழ்வும் நிலைக்குமோ-நெஞ்சே தேடு
நீரோடை தேடும் கலைமானாய்-இறை
தாகம் வாட்டிட தவித்து நேசரைத் தேடு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

இறையன்பு

கன்னியர் இதயங்களையும், காதலின்
வண்ணக் கதவுகளையும் மூடி வைத்த இறைவன்-
தன் இதயக்கதவை மட்டும் -ஏனோ
எனக்கு அகலத்திறந்து வைத்தான்?

கலையும் கனவுகளால் நெஞ்சம் குலைய,
கயிறறுந்த காற்றாடியாய் எண்ணங்கள் அலைய,
பொன்மானைத் தேடி புண்பட்ட இராமனாய் மனம் சலிக்க,
வாழ்வு, வெறுங் கனவாய் பழங்கதைாய் மாறியது

என்றும் நானே உன் மகிமை
மாய உலக பெருமைகள் உன் மகிமையல்ல

வெற்றிக்காய் அல்ல, விசுவாச வாழ்விற்காய்
அழைக்கப்பட்டவன் நீ என்பதை எனக்குணர்த்த
அன்பினால் என்னை ஆட்கொண்டார்
தந்தையும் தாயுமானவன்

கன்னியர் இதயம் ஒன்றும், காதலின் சொர்க்கபுரியல்ல
காதலின் வண்ண கனவுகள் எல்லாம்-சூடிமகிழ
வாடாத தேவலோக புஷ்பங்களுமல்ல-உண்மைக்
காதல் என்று ஏதுமில்லை, எல்லாம் கானல் நீரே

பொய்மை ஆளும் உலகில், எல்லாம் வியாபாரமே
வேஷம்கட்டி , அரிதாரம் பூசி
விடியும்வரை ஆடும் கூத்துக்களே.

மாறும் இந்த உலகில்-மாறாதது இறையன்பு ஒன்றே
அனுபூதியில் உணர்ந்தே ஆனந்தம் கொள்
உன்னில் நீ அமைதி காண்பாய்.
இறை மகன் நீ, தெளிந்த மனம் அமைதி கண்டது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023


கஜுராகு

காமம் கடந்து மோகம் மறைந்தபின்
செவ்விதழ் முத்தங்களும் வெறும் எச்சில்களோ
தேகங்களின் சேர்க்கையும் மோகத்தீ மூட்டிட
-உராய்ந்திடும் சக்கிமுக்கி கற்களின் உரசல்களோ

காமத்தை கடந்து கஜீராகு கோயிலின்
கருவறைக்குள் நுழைந்தேன்-
பேரானந்த வெளியில் கரைந்தே சூனியமானேன்
சூனியமே சுதந்திரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

கலைந்த கனவுகள்



யூதேயா மலைக்காட்டில் பருத்துச் செழித்து வளரும் மரங்கள் மூன்று
பருவங்கள் பல வந்து போயிட மரங்களும் உயர்ந்து வளர்ந்திட
கண்ட விழிகளுக்குள் கனவுகள் துளிர்க்க, கலந்துரையாடலில்
தேனும் இனிக்க, வானுயர்ந்த வளர்ச்சியால் இதயத்தில் ஆனந்தம்

ஒன்று சொன்னது உயர்ந்து வளர்வேன் நான்
உன்னத அரசமாளிகையின் உத்தாரமாவேன்
உயர் குடியெல்லாம் வந்து போக-அரசர் வாழ
அரச மாளிகையில் என் வாழ்வு.

இரண்டாவது சொன்னது
அரச நாவாயாய் நான் மலர்வேன்
ஆழ் கடல் ஓடி-வெற்றிகள் குவிய
அரசர் மகிழ தொடரும் என் கடற்பயணங்கள்

மூன்றவது சொன்னது
வானுயர வளர்ந்து வெற்றித் தம்பமாவேன்
வெற்றிக் கொடி பறக்க- கொற்றவனும்,
குடிகளும் பார்த்து மகிழ
வானுயர்ந்த கம்பீரத்தோற்றம் எனது.



நாட்கள் செல்ல காடு வந்த மர வியாபாரிகள்
மரங்களை வெட்டி வீழ்த்தி விற்றிட
தொழுவமாய் மாறியது ஒன்று
மீன் பிடி படகாய் மாறியது மற்றொன்று

வானுயர்ந்த வளர்ந்த மரமோ
இரண்டு துண்டுகளாய் வெட்டப்பட்டு-புண்பட
மாளிகையின் மண்ணில் கிடந்தது

கண்ட கனவுகள் கலைந்திட
காணாத தொலைவில் நண்பர்கள் பிரிந்திட
கண்ணீர் வடிய-கால் நடைகளின்
மலமும், மூத்திரமும் நாறிட்ட தொழுவம்

ஓர் நாள்
கணவனோடு வந்த கர்ப்பிணி குழந்தை
இயேசுவை பிரசவிக்க இறைமகன்
என் இல்லத்தில் பிறந்திட என்ன தவம் நான் செய்தேன்
உவகையால் ஆனந்த கண்ணீர் வடிய
இறைவனைப் புகழ்ந்தது தொழுவம்.

மாளிகையில் வாழக் கண்ட கனவு
இறை ஆலயமானது.

காலங்கள் செல்ல
கலிலேயா மீனவன் சீமோன் படகில்
இயேசுவின் காலடி பட
மெய் சிலிர்த்த மரம் சொன்னது

காத்திருந்தது இறைமகனுக்காகவோ?
இறைமகனைச் சுமந்த இன்பம், இதயத்தை நிறைக்க
வல்ல இறைவனை போற்றித் துதித்தது

கசை சிதைத்த மேனியோடு கல்வாரிப் பயணம் தொடங்க
சிலுவையாய் மாறியது புழுதியில் கிடந்த மரம்
இயேசு தூக்கி அணைத்துச் சுமந்திட
மாண்டு கிடந்த மரமும் உயிர் பெற்றது



என்ன தவம் செய்தேன் இறைமகனுக்குச் சிலுவையாக
வாழ்வுக்கனி தொங்கும் மரமாக என்னைத் தெரிந்தார்
இன்பம் பொங்க-இயேசுவின் துன்பம்
நெஞ்சை வருத்த கண்ணீர் விட்டழுத மரத்தை
முத்தமிட்டு தேற்றினார் இயேசு.

கண்ட கனவுகள் கலைந்தாலும்
கடவுள் சித்தம் நிறைவேற
நூற்காத தவத்திற்கு கிடைத்த வரம்
கண்ட கனவிலும் வானிலும் பெரிது.

விண்முட்ட வளர்ந்த மரங்களின் கனவுகள்
கண்பட்டால் போல் கலைந்தாலும்
இறைவன் கைபட்டு புண்ணான மனங்களும்
பொன்னாய் மாறி இறைதொண்டு புரிந்த அதிசயம்


எளிய மனங்களைத் தேடும் இறைவன்
புண்பட்ட மரங்களையும் இறைபணிக்கு அழைத்தார்.
பண்பட்ட மனங்களோ உம் சித்தம் நிறைவேறுக
என்றே பரிபூரண சரணாகதியில் இன்புற்றார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

காமத்திலிருந்து கடவுளுக்கு

கொஞ்சி மகிழும் காதல் அஞ்சுகங்களும்,
கூடி மகிழும் கலைமான்களும்-நெஞ்சில்
ஏக்கத்தை வரவழைக்க வாடி நின்றாள்





சோடியாய் கூவிக் களிக்கும் புள்ளிக்குயில்களும்,
அகவி, தோகை விரித்தாடும் கலாபமயில்களும்-
மனதில் விரகதாபத்தை மலரவைக்க ஏங்கி நின்றாள்

எங்கும் நிறைந்த அழகு-இதயத்தை மயக்கிட
இதுவரை அறியாத புதுவித ஏக்கம் நெஞ்சை நிறைத்திட
பூத்துக் குலுங்கும் ஏதேன் வனத்தே-
வண்டு படாத வண்ண மலராய்ப் பூத்திருந்தாள்
கிளி கொத்தாத தேன் கனியாய் கனிந்திருந்தாள்
ஆதாமின் காதல் தேன்கனி ஏவாள்

வண்ணப்பூக்கள் வாஞ்சையோடு -உதிர்ந்து
வனமோகினிக்கு வண்ண ஆடை நெய்திட
மதுமலர் கார்குழல் மங்கைக்குத் தோகையாகிட
எண்ணப் பூக்களிலோ என்னைச் சூட இறைவன் தந்த
என் தலைவன் எங்கே? என மனம் ஏங்கித் தவித்தது

விரகதாபத்தால் மெய் சிலிர்த்திட
பொன்னுடல் பூத்த செவ்விளநீர் முலைகளும்
பொன்மார்பனைத் தழுவத் துடித்து பூரித்து விம்மிட
காமன் கணைபட்டு வாடி நின்ற கன்னி



செவ்விதழ்களும், செவ்விதழ் தழுவி செந்தேன் பகிரத் தவிக்க
பெண் மனைதை வாட்டும் காதற் காமம் -பூவுடலைத்
தீயாய் சுட்டெரிக்க-நாணி ஆனிப்பொன்மேனி சிவக்க
குறுநகை பூத்த முத்து நகையாய் நங்கை ஏவாள்.



நீராடி, மலர் மாலை சூட வந்த மன்னவனும்
காமனோடு போராடிக் களைத்த காமினியை
மலர்ந்து மணம் வீசும் காதல் தேன்மலரை
கனிந்து சுவை வீசும் காதல் கனியைக் கண்டான்

கண்டவனும் காமன் கணைபட்டு, காதல் பசியுற்று
காதல் கனியை இரசித்தே புசித்திட-கன்னியும், காளையும்
காதற் காம வேள்ளி யாத்திட்ட இனிக்கும் இன்பப் பொழுதது



உறங்குவதுபோல் உறங்கும் உறங்காத கன்னியின் உணர்வுகளை
நூலிடை தழுவிய கரங்கள் சீண்டித் தூண்டிட-நூலாய்க்
கரங்களுள் நுழைந்தவளை நுதலில் முத்தமிட்ட இதழ்கள்
நூதனமாய் அவள் இதழ் தொட்டுக் களிக்க
இதழ் கவ்வி, இதழ்கள் இதழ்த்தேன் சுவைத்தனவே

கண்கள் கலந்து காதல் தேன் பொங்க
காமத்துப்பால் பொங்கிப் பூரித்து வழிய
பொன்மார்பன் மார்பில் பூமகளும் சாய
பொன் முலைகள் உழுது புது இன்பம் கண்டனவே

கன்னியும் தேன்கனியாக, காளையும் கொத்தும் கிளியாக
கலவியின்பம் இதுவரை அறியாத பேரின்பச் சிகரமாக
உயிரும் மெய்யும் கரைந்து மனம் மறையக்
வண்டும், வாசத் தேன் மலரும் கொண்டாடிய காமன் பூஜை

உணர்வுகள் பூரித்துப் பொங்க, உயிர் மெய் ஒன்றாய்க் கலந்திட
விருந்தோம்பி விந்தேற்று, உயிர் படைத்து
காம அக்கினியில் மனம் ஆகுதியாகிட யாத்த காதல் யாகம்
காமலீலையின் நுட்பங்களை காதற் காமத்தில் புரிந்து
காம சூத்திரம் யாத்துக் களித்த காதல் யோகம்



இறை தந்த மகளை மணமகளாய்க் கொண்டவன்
உயிரும் மெய்யும் ஒன்றாய் இணையும் மன்மத வேதத்தை ஓதி
தம்மையே ஆகுதியாக்கி காதல் வேள்வி யாத்துக் களித்தார்
ஈரடிக் கவிதையை இணைந்தே இல்லறமாய்ப் புனைந்தார்



மெய்தழுவிச் சிலிர்க்க , உயிர்தான் உயிரோடு கலந்து களிக்க
நெய் வார்த்த ஆகுதீயாய் காதற் காமம் வளர
கண்பார்த்து நெஞ்செழுதிய காதல் காவியத்தை
காமத்துப்பாலாய் சுவைத்துக் காமவேதமாய் தொழுத காதலர்

பல்கிப் பெருகி படைப்பைத் தொடருங்கள்-படைத்தவன்
அன்புக் கட்டளையாக, அன்பினால் இணைந்த இதயங்கள்
ஆரத்தழுவி ஆனந்த மயக்கத்தில் மூழ்கிக் கிடக்க-மெய் சிலிர்க்க
செவ்விழிகள் கண்டதோ உண்ணத் தடை என்ற அறிவுக்கனி

கலவி மயக்கம் தந்த பேரின்பம் கண்களை மறைக்க,
கண்களுக்கு கனி விருந்தாக, கருத்துக்கும், அறிவுக்கும் உரித்தாக
மங்கையும் மயக்கத்தே பறித்துண்டாள்-
மனங்கவர்ந்தவன் உள்ளம் கவர- பாதியை தன்னில்
பாதியாய் கலந்திட்ட பதிக்கும் உண்ணக் கொடுத்தாள்





பருவக் கொடியும் அறிவுக் கனியைப் பறித்துண்ண
அறிவுக் கனியால் நெஞ்சம் ஆனந்தக் கூத்தாட
கலவி மயக்கத்தே காளையும் உண்டான்
நாமும் கடவுளைப்போல் ஆவோம் என்றே
ஒன்றாய்க் காதல் கீதம் இசைத்தார்

உண்டவர் உண்டு களித்திட
உண்டது விலக்கப்பட்ட அறிவுக்கனி என
உணர்வு விழித்து இடித்துரைத்திட
தம் மெய் நிலை கண்டார்

அறிவு விழித்து ஆணவம் தலைதூக்க
நாணிய காதலர் ஓடி ஒளிந்தார்
அத்தி இலைகளால் ஆடை நெய்து
தம் நிர்வாணம் மூடி வெட்கி நின்றார்.

உண்ண வேண்டாம் என்ற தடையே உண்ணத் தூண்டிட
உண்டு சுவைத்த இன்பம்-இறை உறவை துண்டிக்கும்
கொடுந் துன்பமாய் மாறிட -இருமை அறிந்தார்



செய் பிழையை ஏற்க ஆணவம் மறுக்க
கடவுளை பிரிந்து "வெளியே" நின்றார்
கலவி மயக்கத்தே தம் நிலையிழந்த காதலர்

தம்மை அறிந்து மீண்டும்-ஏதேன் நுழைய
தந்தையாம் கடவுள் விடுத்த அழைப்பை ஏற்றவர்
தம்முள் மறைந்த தூய மனமே ஏதேன்-அனுபூதியால்
துன்புற்று அறிந்து இன்புற வாழ்வைத் தொடர்ந்தார்

மானிடம் "கடவுளாவதே"-இறை சித்தம்
அறிவைச் சுவைத்து ஆணவம் கொண்ட மனம்
நன்மை தீமை அறிந்திட,
இருமை கடந்து முழுமை அடைந்திட
ஆணவம் கழித்து தன்னை அறிந்திட
இறை விடுத்த அழைப்பே "அறிவுக்கனி"

"கடவுளைப்போல் ஆகிட"
உலகின் முதல் மனிதனும் மனுஷியும்-இறைவனை
எதிர்த்துப் புரிந்த காதற் காமப் புரட்சி
ஆணவத்தின் எழுச்சியாய், மானுட வளர்ச்சியானது
ஆணவம் கழித்து மெய்யறிவு பூத்திட-உள்ளுணர்வின்
அதி உன்னதமே வாழ்வுக் கனியானது



கபடடின்மையான முதற் குழந்தை மனமோ
ஆதாம், ஏவாளுக்கு வரமானது-அறிவுக் கனியால்
நன்மை, தீமை இருமை அறிந்து பிளவுண்ட
ஆணவ மனமோ சாபமானது

மனமழிந்து உள்ளுணர்வில் உயர்ந்தால் தெய்வீகம்
தாழ்ந்தால் விலங்கு-
இருமையில் ஊசலாடும் மனித வாழ்வு

அறிவுத் தேடலில் இறைவனை மறந்து போன மானுடம்
தம் அடையாளம் தேடி உலாப்போனது.
இருமை கடந்து தம்மை அறிந்து-ஆணவம் துறந்து
" வெளியே சென்று" "தம்முள் திரும்பிடும்"
யாத்திரையோ ஆன்மீகப் பயணம்



உள்ளும், வெளியும் ஒன்றாக
வாழ்க்கை வட்டம் பூர்த்தியாகும்
ஆன்மீகமே மெய்யான வாழ்வு


அஹம் பிரமஸ்மி (நானே நீ)என்றே
தூய மனம் கானம் பாடும் தெய்வீக நிலையிது.

நம்முள் இறைவனை காணாத வரைக்கும்
இந்த ஒட்டு மொத்த உலகமும்
அர்த்தமற்றதாய்த் தோன்றும்

நம்மை நாம் அறியும் மெய்யறிவே ஞானம்
ஆணவம் கழித்த
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-5-2023

காயமே இது பொய்யடா



மூப்பும், பிணியும், சாவும் வருத்திட
நாளும் மாறுபடும் மெய்யும் பொய்யே?
உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
மெய்யடியார் கண்டதும் உண்மையே

கானக்குயிலின் பாடலில் இசைஞானம்
கட்டறுத்துப் பாயும் நதியில் கம்பீரம்
கலாபமயிலின் நடனத்தில் பரதம்
அலைபாயும் கடலின் ஆனந்தம்

மின்னலில் ஒளி அலங்காரம்
இடியோசையில் எண்ணில்லாத் தாளம்
வானவில்லில் வண்ணங்களின் ஜாலம்
வண்ணமலர்களில் வாசங்களின் கோலம்

பாலிலும் கனியிலும், தேனிலும் இனிமை
மலரிலும் வான் நிலவிலும் அழகின் மேன்மை
புள்ளினம் பாடிப் பறக்க- வாழ்வே சுமையாக
மனித மனத்திலோ ஆயிரம் கவலை

ஆறறிவு மானுடம் நடைப்பிணமாய் வாழ்ந்திட
ஆணவமில்லாத் தாவர, விலங்கினம்
ஆனந்தமாய் வாழ்ந்திட-என்னே இந்த உலகு
ஆணவம் துறந்த தூய மனமே சச்சித்தானந்தம்

பிரபஞ்சத்தின் மகப்பேறோய், மெய் உருக்கொள்ளும்
தோற்றப்பாடே பிறப்பு, பஞ்சபூதங்களும் பிரிந்திட
உயிர்ச் சக்தி பிரபஞ்சத்தோடு சங்கமிக்க
சூனியத்தில் ஒன்றாகும் நிலைப்பாடே இறப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-08-2023

காயம்

காவலன் இல்லாத கோட்டை நம் கூடு
கடவுள் தந்த உயிரோ இதில் ஈடு
காலன் வரமுன்னே மனமே இறைவனைத் தேடு
மரணம் வந்தபின் காயமே காடுதான் உன் வீடு

ஆடைகட்டி ஆயிரம் வேஷமிட்டு மேடையில்
ஆடுதடி காயம்-கிளியே
காற்றுப்போன பின் பாடையில் பெயரிழந்து
சவமாகி ஊர் கூட்டி காடுபோகுதடி மாயம்.

பெற்றவரும், உற்றவரும் பற்றறுத்து சோகம் பூண
தீயினில் வெந்தாலும் வேகாதடி செய்த பாவம்
சுட்ட பொன்னுக்கு மதிப்புண்டு -கிளியே
சுட்ட "மண்ணுக்கு" ஏதடி மதிப்பு

பற்று

பொன்னும் பொய், மண்ணும் பொய்
உன் உயிர் நானெனும்-காதல் உறவும் பொய்
நான் பொய், நீ பொய்
எனது, உனது என்னும் உறவும் பொய்
எல்லாமே பொய்யென அறிந்தபின்
எல்லையில்லாதான் திருப்பாதம் பற்றி
விடுதலை பெற்றுக்கொள் மனமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

கீதாஞ்சலி

இமைப்பொழுதும் உம்மை மறவாத இதயம் வேண்டும்
இதயத்துடிப்பிலும் உன் திருநாமம் இசையாகும் வரம் வேண்டும்,
சோகம் மலையாகிச், நெஞ்சம் புண்ணாகி வாடிடும் போதும்
அப்பா உன்னைத் துதித்திட வரம் வேண்டும்

கவலை வெள்ளத்தில் மூழ்கிடும் போதும்
தனிமைத் தனலில் தீய்ந்திடும் போதும்
ஊனமுற்று உறவுகள் உடைந்திடும் போதும்
என் நம்பிக்கை நீதான் அன்பிறைவா

அகமகிழ்ந்து என்னை அர்ச்சனையாக்குகின்றேன்
மனமகிழ்ந்து ஏற்பாய் மாதவனே தந்தை திருமகனே
இகமனைத்தும் என் காலடியில் கிடந்தாலும்-அம்மானே
இவையணைத்தும் ஈடாகுமோ உன் திருவடிகளுக்கு

எனக்கென்று ஏதுமில்லை இறைவா
என்னிடம் இருப்பதெல்லாம்
உனக்கென்று துடிக்கும் என்
உடைந்த உள்ளமே.

காணத்தவமிருக்கும் அழகுத் திருமுகத்தை
என் விழிகளும் கண்டு மகிழாதோ?
மோனத்தவமிருக்கும் என் மனமும்
மாதவனே உன்னில் கரைந்து மறையாதோ?

உன் காலடியில் மலரானாள்-காலமெல்லாம் பூத்திருப்பேன்
உன் சந்நிதியில் சுடரானாள்- ாளெல்லாம் ஒளிர்ந்திருப்பேன்
உன் இல்லத்தில் தூபமானாள் - நறுமணமாய் மணந்திருப்பேன்

உன்னை மறப்பதென்பது என் இறப்பு-அப்பா
என்னில் உன் இருப்பே நாளும்-என் புதுப்பிறப்பு

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
PaPax Ravichandra-6-08-2023

கொலையும் இரட்சணிய இறையியலும்

ஆன்மீக கிளர்ச்சியாளர் இயேசுவின் படுகொலையை
இரட்சணிய இறையிலாய் மாற்றி
இயேசு இரட்சகர், நம் பாவங்களுக்காய் மரித்தார்
புது மதம் படைத்தார்-கிறிஸ்தவர்

அதிகாரம், ஆட்சி, அரியணை, மாட்சி
எல்லாம் காலணையாக, அலகைக்கு அடி பணிந்தே
உண்மையைப் புறக்கணித்தார்

பூசுவதும் நீறு, பூணுவதும் வெண்ணாடை
கழுத்திலே திருச்சிலுவை-ஓதுவது திருமறை
மதம் பிடித்தே மதங்களாய் பிரிந்தார்

இரத்தவியர்வை சிந்திட ஜெபித்தவர் தந்தையே
இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக்கூடுமானால்
அகலட்டும், ஆயினும் என் சித்தமன்று உம் சித்தம் ஆகுக
அச்சத்தின்-இயலாமையின் எதிரொலியாய் அவர் அழுகுரல்

தந்தையே தாம் செய்வது-இன்னதென்று
அறியாமல் செய்யும் இவர்களை மன்னியும்-இயேசுவே
இவர்கள் செயல் கொலை எனச் சொல்லிட
என் தந்தையே என் தந்தையே, ஏன் என்னை கை நெகிழ்ந்தீர்
அண்டமெங்கும் எதிரொலித்த அபயக்குரல்

பூரண சரணாகதி-இராஜயோமாக
விழிப்புணர்வின் உச்சத்தில் தம் ஆவியை கையளித்து
இயேசு கிறிஸ்துவாக மலர்ந்தார் (Christo genesis)
வாழ்வில் பக்தி யோகம், ஞானயோகம்,
கர்ம யோகம் காட்டிய-மகரிஷியாய்
மனுபுத்திரனாய் அவதார புருஷராய் இயேசு கிறிஸ்து

பாவநிவாரண பலியாய், நம் பாவங்களுக்காக
தன் மகனைக் கொல்லுமளவிற்கு அன்பு இறைவன் கொடியவரல்ல
சத்தியத்திற்கு சாட்சியமாய் இயேசுவின் இறப்பு
தனி மனித ஆன்மீக கிளர்ச்சியின் உச்சத்தில் உயிர்ப்பு

எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல்
எம் பாவங்களைப் பொறுத்தருளும்-மன்னிக்கும் மனதிற்கே
மன்னிப்பு, நல் மனத்தவருக்கே அமைதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்

மதவாதம், இனவாதம், பயங்கரவாதம், போதைவஸ்து
பாலியல் துஷ்பிரயோகம் உலகை அச்சுறுத்த,-
நீறும், நாமங்களும், சிலுவையும், காவிகளும், வேஷங்களாக
சாரமற்ற உப்பாய் மாறிடும் மதங்கள்-மதம் விட்டு,
மனம் மாறி-திசைமாறும் விசுவாசப் பறவைகள்.

ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள்-மந்தையை வேட்டையாட
அன்னாஸ்-கைப்பாஸாய் திருச்சங்கத் தலைவர்கள் உருமாற
வல்லுறவுக்காய் குழந்தை இயேசுவை தேடும்
ஏரோதாய்ப் பாதிரிகளின் கொடுநிலை?

சிறுவர்களை நரபலி கொடுத்து-தெய்வங்களின்
சினம் தணித்த காலம் மலையேறிட-சிறுவர் துஷபிரயோகம்
சில பாதிரிகளுக்கு பாலியல் வரப்பிரசாதம்
துன்புறும் குழந்தை இயேசுவோ சற்பிரசாதம்

பாதிரியின் பாலியல் வல்லுறவுக்காளான அநாதை மனம்
ஆறுதல் இன்றிச் சிதைய- ஆண்டவனும் நாணி வானில் ஒழிய-
போதைக்கு அடிமையானார் பலர்
தற்கொலையில் சாந்தி கண்டார் சிலர்

கழுத்தில் எந்திரக் கல்லை கட்டி
கடலில் எறியப்பட வேண்டிய காமுகன்
கழுத்திலோ தங்கச் சிலுவை
விரலிலோ வத்திக்கானின் முத்திரை மோதிரம்.

முடி சூடி, பொற்கோல் தாங்கி
காற்றில் சிலுவைகள் வரையும் -வத்திக்கானின்
திறைசேரி அதிகாரி-பாப்பரசரின்
ஆலோசகர்- ***கர்தினால் ஜோர்ஜ் பீலே***

சிறுவர் துஷ்பிரயோகி அருட்பணி ஜெராலட் றிட்ஸ்டாலை
காக்க முயன்றிட-திருச்சபையின் மாண்பும்
மகத்துவமும் புழுதியில் விழுந்த பூமாலையானது

மெல்பிரே பங்கின் பாதிரி ஜோர்ஜ் பிலேயின்
திருவிளையாடல்கள் வெளிச்சத்திற்கு வர
விக்கித்து துக்கித்த விசுவாசிகள்- ஜெஸ்தமெனியில்
இரத்த வியர்வை சிந்திடும் குழந்தை இயேசுக்கள்

திருப்பணி அறையில்-திராட்சை இரசம் அருந்திய இரு சிறாரை
பாலியல் துஷ்பிரயோகம் செய்த காமுகன்-செய்திதாள்கள்
காட்டுத் தீயாய் சேதியாய் பரப்பிட-பாதிக்கப்பட்டோர்
வண்ண நாடாக்கள் கட்டி வெளிக்காட்டிய பலத்த கண்டனம்

நடந்த விசாரணை-கிடைத்த சிறைத் தண்டனை.

பாதிரிகளின் பாலியல் வல்லுறவுக்கு ஐந்து வயதுச் சிறுமி எம்மாவும்
சகோதரர் கத்தியும், அந்தனியும் ஆளான கொடுமை
தாய் கூறிய திடுக்கிடும் உண்மை
ஓயாத மனச்சிதைவால்-துன்புற்ற எம்மா
பின்னாளில் மணிக்கட்டை அறுத்து மரித்ததோ-குழந்தை
இயேசுவுக்கு நேராத வன்கொடுமை

பசிக்காய் வேட்டையாடி இனவிருத்திக்காய் புணரும் விலங்குகளும்-
குட்டிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதில்லை
விலங்கிலும் இழிந்த விறைத்தகுறிப் பாதிரிகள்-திருப்பலியில்
இயேசுவாய் மாறிடும் நம்பிக்கைகள்
பரபாஸ் மீட்பராய் மாறிட்ட கொடுநிலைகள்

பிறன் மனை நாடிய தேவர்களும் அசுரர்களும்
சிறுவர் துஷ்பிரயோகம் செய்ததில்லை-
அருட் சகோதரிகளையும்-பாலியல் அடிமைகளாய்-
பாதிரிகள் நடத்தும் கொடுமை பாப்பரசர் கூறிய
அருவெறுப்பான உண்மை.

“ மீண்டும் வருவார் கிறிஸ்து”பொய்யாய்போன பவுலின் தீர்க்க தரிசனம்
தலைவன் வரத் தாமதிக்க- ஆட்டு மந்தையை வேட்டையாடும்
ஓநாய்களுக்கோ அச்சமில்லை என்பது இன்றைய நிதர்சனம்.

உண்மையே உனக்கு விடுதலை, உலகின் ஒளி நீங்கள்
உனக்கு நீயே ஒளியாகிப் போ-“அப்போ தீப பவ”
புத்தர் -இயேசு பெருமானின் பொன்மொழிகள்
மானுடத்திற்கு விடுக்கும் அறை கூவல்கள்

குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள்,
அவர்களைத் தடுக்காதீர் என்றவர்- பாதிரிகளின்
சிறுவர் துஷபிரயோகம் கண்டு திகைப்புற்றார்
கண்ணீரும் செந்நீராய்ப் பொங்கியெழ-தந்தையும்,
தன் மகன் படும் துயர் கண்டு துன்புற்றார்

மீண்டும் அவர் உலகிற்குச் சென்றால்
பாலியல் வல்லுறவுக்கு ஆளாவார் என்றோ
இயேசுவின் வருகையைத் தள்ளிப் போட்டார்

சோதோம், கொமோராவாய்-மாறிடும் திருச்சபையைக் காத்திட
இறைவனை வேண்டிடும் தந்தை பிரான்சிஸ்
பத்து நல்லோர் இன்றிப் பரிதாபமாய்-கல்லின் மேல் கல்
இராதபடி மெல்லவே இடிபடும் கள்வர் குகையாய் திருச்சபை

உண்மையை வாழ்வாக்கியவருக்கு -பணிவு அர்த்தமற்றது.
எளிமையை வாழ்வாக்கியவருக்கு -ஏழ்மை அர்தமற்றது
தூய மனத்தவருக்கு-கற்பு இயல்பானது.


மழித்த சிரசும்.மெய் போர்த்த காவியும் துறவல்ல
தூய மனதின் ஆனந்த விழிப்புணர்வே துறவு
அதுவே மெய்யான சந்நியாசம்.

ஏழ்மை, பணிவு, கற்பு வாக்குறுதி
வருத்தும் காமத்தோடு போராடும் வாழ்வோ எரி நரகு
காமத்தை விழிப்புணர்வோடு கடந்தால் மோட்சம்
இறைவனோ தேவ கடாட்சம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

குணம் அழிக்கும் ஜெபக்கூட்டங்கள்

வண்ணப் பதாகைகளும், வர்ணச் சுவரொட்டிகளும்
கண்களைப் பறித்து தெருக்களை, ஆலயங்களை அலங்கரிக்க
சுப்பர் ஸ்டார்களாய் அருட்பணிகளின் வண்ணப் படங்கள்






கையில் விவிலியம் கழுத்தில் அலங்காரச் சிலுவை, குறுந்தாடியும்-
வான் நோக்கிய பார்வையுமாய் நடிப்போ பக்திப் பரவசம்-
குணமளிக்கும கூட்டங்களுக்காய்- மதவாதிகளின் முகபாவங்களில்
“ ***நடிப்புலக மாமேதை சிவாஜியை***” மிஞ்சும் நவரசங்கள்

கோட்-சூட் அணிந்து ஒலிவாங்கி அதிர-இறைவாக்கினரை
மிஞ்சிடும் பிரசங்கிகளின் அட்டகாசத் தீர்கதரிசனம்
மண்டியிட்டு வணங்கி-கையை முத்தமிடும்
“பக்திக் கழுதைகளின்” முட்டாள்தனம்

அதிகாரம், வசனம் மனப்பாடமாக, அட்டகாசமாய் ஒலிக்கும் வேதாகமம்
பகுத்தறிவில்லாத மந்தைகள் பக்திப்பரவசத்தோடு கைதட்டி ஜெபிக்க
தூய ஆவியை வரவழைத்து, சாத்தானை அட்டகாசமாய் விரட்டி
சாட்சியம் பகிர-நாடகமாய் நடத்தும் குணமளிக்கும் கூட்டங்கள்





தேவதத்தர்களோ, தேவதாஸர்களாக
குணமளித்தல் எம் கொடையென முழங்கிடும்
தேவா-சந்திரா-ரஜிவன், போல் ரொபின்சன், ரொஷான்
இந்திய இறக்குமதியாய் தென்னிந்தியப் போதகர்கள்

மேடை அதிரப்பாடி, குப்பைகளை வேதமாய் வாந்தியெடுத்து
பேய் ஓட்டி சக்திமானகளாய் மார்தட்டி ஆர்ப்பரிக்க
ஞாயிறு திருப்பலியும், பண வேண்டுதலின் காலம்
தவக்காலமும் கப்பமாய் காணிக்கை செலுத்தும் நேரம்



ஆரவார ஞாயிறு பூஜைகளில்-
அருட்பணிக்கு மாலை சூடி-“திருநங்கையர்”
ஆராத்தி எடுத்து , கும்பம் சுற்றி-“சாமிக்கு”
கண்ணூறு கழிக்கும் கோமாளித்தனங்கள்.


ஆலயங்கள் குண்டுக்கு இரையாக, ஆழ்ந்த நம்பிக்கைகள்
வெடிப்புக்குள்ளாக மௌனம் காத்த பிரச்சாரப் பீரங்கிகள்
குண்டும், கொரோனாவும் வருவதை அறியாத தீர்கதரிசிகள்
பேயை விரட்டி, நோயை குணப்படுத்தும் கோமாளிகள்-

கொரோனாவுக்கஞ்சி-தடுப்பூசி ஏற்றிய தந்திரிகள்
குணப்படுத்தும் கூட்டம் போடாத குள்ள நரிகள்



இத்தாலியருக்கும், கிறிஸ்துவை அறியாத சீனரும் நலம் பெற,
வாழும் புதுமை மிகு அருட்பணியாளர்களின் புதுமைத் திருப்பணி
வத்திக்கானுக்குப் புரியாமல் போன அதிசயம்தான் என்ன?
நாளும் திருச்சபை பிளவுபடும் அவலம்தான் என்னே!

அனுப்புங்கள் இவர்களை -மதம் மாறிச் சீனா குணமாகி
ஜனநாயகம் மலரட்டும்-ஸ்பெயின், இத்தாலி இயல்பு நிலைக்கு மாறட்டும்
உக்கிரேன் யுத்தம் ஒழிந்து, வாடும் வறிய நாடுகள் வளம் பெற
உலகில் அமைதி நிலவட்டும். மதப் பயங்கரவாதம் மறையட்டும்






மூடுங்கள் சீலோம் வைத்தியசாலையை-முக்தியளிக்கும்
குருக்கள்-நோயாளரைக் குணப்படுத்தட்டும்.-
வைத்தியர்களும், வைத்தியசாலைகளும் வேண்டாம்
ஆலயங்களே ஆரோக்கிய நிலையங்களாகட்டும்.

பாதணியின்றி பக்தர்கள் பார்த்து பூஜிக்க நடக்கும் தவசி-
சொகுசு வாகனத்தில் பயணிக்கும் உல்லாசி-
கபட சந்நியாசி, குணமளிக்கும் ஞான உபதேசி?

விரியன்கள் விளம்பரம் நாடி வேதம் ஓதிட-வெள்ளாட்டு
மந்தைக்குள் கறுப்பு ஓநாய்கள் சுதந்திரமாய் உலாவர
ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் நடத்திடும் நாடகங்கள்
மானுடத்தை மனநோயாளிகளாக்கும் தந்திரங்களே
மதப்பயங்கரவாதத்தின் புதிய வடிவங்களே





விழித்தெழு மானுடா-பாவியல்ல-நீ
இறைமகன் நீ -கிறிஸ்து உன் சகோதரன்
உலகின் ஒளி நீ!, உப்பு நீ!
உண்மையே உனக்கு விடுதலை அளிக்கும்

உண்மையின் தரிசனத்தை மறைக்கும்
ஆன்மீகப்போலிகளின் நிஜரூபங்கள் காண
அலங்கார முகமூடிகள் கிழித்திட-விழித்தெழு

மண்ணல்ல நீ மண்ணுக்கு திரும்பிட, மனந்திரும்பி தந்தையிடம் வா
அருட்பணி என யாருமிலர், எல்லாம் பல வருடப் பயிற்சி நெறி
குருக்கள் யாருமில்லை,-உண்மையே உன்தன் ஞானகுரு
அறியாமை இருள் நீக்குபவரே ஆசான்-உன்னை
மண்டியிட வைத்து ஏமாற்றுபவன் கபட சந்நியாசி



Swami Krushnaswarup Dasji, a prominent religious leader of Swaminarayan Temple, a religious organization run by Shree Sahajanand Girls Institute (SSGI) of Bhuj city, according to a report published in the ***Ahmedabad Mirror***, addressing a religious function, he said, “If any husband eats a handmade meal from a menstruating wife, he will be born as an ox in the next life, and a menstruating woman who cooks food for her husband will be reborn as bitch.



குருடனுக்கு குருடன் வழி காட்டினால்
குழியில் விழவேண்டும், விழிப்புணர்வே விடுதலைக்கு வழி
கள்வர் குகையல்ல ஆலயம், ஆன்மா
லயம் பெறும் இடமே ஆலயம்



ஆலயங்கள் உண்டு-இறைவனைக் காணோம்
கிறிஸ்தவர் உண்டு-கிறிஸ்துவைக் காணோம்

வானகம் போனவர் வரவில்லை அங்கும் கொரோனா போலும்
தனிமைப்படுத்தல் முகாமில் தந்தை-தம் மகனை
தடுத்து வைத்தாரோ தெரியவில்லை-தீர்க்கதரிசிகளே கூறுங்கள்

உண்டியல்களில் போடும் செல்வமெல்லாம் வட்டியோடு பெருகிட
வறுமையில் வாடும் -ஏழையைப் பார்த்தும் பாராமல் போகும்
குருக்களும், லேவியர்களும் வாழும் கொரோனா உலகில்-
அநாமதேய நல்லசமாரித்தனாய் மாறி உதவிக்கரம் நீட்டிடுவோம்,
நாம் கிறிஸ்தவர் அல்ல- கிறிஸ்து முழங்குவோம்

கெரோனாவை, சஹரானின் குண்டுத் தாக்குதலை அறியாத
ஆன்மீகப் போலிகளின் தீர்க்கதரிசனங்களும்
குணமளிக்கும் கூட்டங்களும் கபட நாடகங்களே
பசுத்தோல் போர்த்திய ஓநாய்களின் வேடம் களைந்திட-
மானுட விழித்தெழு!. பகுத்தறிவே உண்மையின் பாதை
விழிப்புணர்வே நிலை வாழ்வின் கீதை



கொரோனா உடலைத்தாக்க, குணமளிக்கும் நாடகமோ
இயேசுவை மறுதலித்து, காட்டிக்கொடுக்க
தடுப்பூசி போடாத பாதிரிகள் உண்டோ?-மானுடத்தை
மனநோயாளியாக்கும் விரியன் பாம்புகளே-
மனம் மாறுங்கள்

யோவானின் கர்ஜனை கேட்கின்றது? கள்வர் குகையான
ஆலயத்தை-கசையால் கழுவி கும்பாபிஷேகம் செய்திட
இயேசுவின் கருணை பொங்குகின்றது
நாமும் இயேசுவே
நம்மில்தான் கிறிஸ்துவின் மறுவருகை

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-22-06-2023

மங்கள நாயகி

மங்களம் சொல்ல மதி நுதலில் குங்குமம்
கார்குழலில் பூச்சரம், புன்னகையில் முத்துச்சரம்
அணைக்கும் அன்புக் கரங்களில் தாய்மை
அள்ளி வழங்கும் உள்ளத்தில் வள்ளாண்மை

அணைக்கும் கரங்களில் காம்போதியும்
அன்னை இதயத்தில் பூபாளமும் ஒலிக்க
தாயின் அணைப்பில் குழந்தை இயேசு சிரிக்க
பூ முகத்தில் என்றும் மாறாத மங்களப் புன்னகை

அன்பைப் பகிர்தலில் அமுதசுரபி
பசித்தோருக்கு உணவளித்தலில் அன்னபூரணி
அள்ளி வழங்கலில் அட்சயபாத்திரம்-ஆரோக்கியம்
தரும் சஞ்சீவினியாய் அன்னை வேளாங்கன்னி

சோர்ந்த மனங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்
அன்னையின் புன்னகை, நாடி வந்த கரங்களுக்கு
வாரி வழங்கி வறுமை தீர்க்கும் தாய்மை

அன்னையின் தரிசனம் அழுதவிழிகளுக்கு ஆறுதல்
அணைப்போ நொருங்கிய மனங்களுக்கு இளைப்பாறுதல்
எந்நாளும் இறைவனைப் போற்றும் தாய் மனம்
தஞ்சமென்று வந்த நெஞ்சங்களுக்கு தாயோ அடைக்கலம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

மனிதன் தேடாத இறைவன்

இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், யூதம்,
மதங்களைத் தழுவி மனிதர் மானுடத்தைப் பிரித்தார்,
அன்பு, உண்மை, ஒற்றுமை தொலைந்த கதையாக
மதவெறியராய் மாறி, அன்பு இறைவனைத் தொலைத்தார்.

பிரிவினையும், மதப்பயங்கரவாதமும் மானுடத்தை அச்சுறுத்த
பெருமான் புத்தரும் கிறிஸ்துவும், கிருஷ்ணனும்-
பொம்மைகளாய் மாறிடக் கொண்டாட்டங்கள், சடங்குகள்

நடைப் பிணங்களாய் வாழும் மானுட இதயத்தில்
உண்மையைத் தேடும் ஆவல் இல்லை
ஒற்றுமைக்குச் சான்றும் இல்லை

பாடும் பறவைகள் அழுவதில்லை, தேய்ந்து வளரும் நிலவு
சோர்ந்து போவதில்லை-சுற்றும் உலகு, பயணத்தை நிறுத்தவில்லை
பிறப்பும், இறப்பும், காதலும் காமமும் ஓயவில்லை

பயணங்கள் முடிய வீடு திரும்புகின்றோம்?
எங்கிருந்து வந்தோம்? எங்கே போகின்றோம்?
எவருக்கும் தெரியவில்லை-நாளும்
உண்டு, குடித்து, உறவு கொண்டு உடல் மடிய-
மண்ணாய்ச் சாம்பலாய் மாறும் வாழ்வும் வாழ்வா?

சுற்றம் வளர்த்துச், சொத்துச் சேர்த்து பட்டம், பதவி தேடும் வெளியூர்ப் பயணி
சுதந்திரம் அறியாத அடிமை., எல்லா வெளிப் பயணங்களும்
என்றோ ஓர் நாள் முடிய, மரணம் இளைப்பாற அழைக்க
மடிவதற்காய் வந்தோமா? நிலைவாழ்வை சுவீகரிக்க வந்தோமா?

காலம் ஓயும் காலத்தில் வாழ்வின் பொருள் யாரறிவார் ?
மனம் மாறினாலன்றி நிலை வாழ்வை யார் பெறுவார்?
தீர்த்த யாத்திரை எல்லாம் வெளியே தொடர்ந்திருக்க
மெய்யான பயணமோ கட உள் என்றே அழைத்திருக்க
கடந்து கரை சேர்ந்தவர் கடவுளானார், சேராததோர்
சோர்ந்தே-கருப்பைக் குழியில் மீள வீழ்ந்தார்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

மனிதன் பாதி தெய்வம் பாதி

மண்ணுள் தன்னை விதைத்து, தன்னாவியை ஊதி
மனிதனுள் தெய்வம் முளைத்திட
தன் சாயலாய் மனிதனைப் படைத்த இறைவன்.

ஆணவம் களையாய் முளைக்க-மாயை
மெய்நிலை காணத் தடையாய் நிலைக்க
ஈசன் முளைக்க ஏற்ற விளை நிலம் இன்றி
மனிதனுள் மறைந்த இறைவன்

மண்ணுக்குள் பொன்னாய் புதைந்தவனை காணாத மனம்
ஆணவத் தாண்டவமாட , கன்மம், மாயை சேர்ந்து கூத்தாட
மனமழித்தவர் கண்டு மொழிந்த உண்மை
கட உள்ளே- கடவுள் நீ

ஆணவத்தில் நிலைப்பது சாபம், மனமழிப்பதோ தவம்
தேவனாய் மாறுவதோ வரம், மண்ணுள் மறைந்த மா புதையல்
மனிதன் அறியாத இரகசியமானது, சச்சித் ஆனந்தமாய்
தன்னுள் புதைந்தவனைக் காணாது-மனிதம்
பொன்மானைத் தேடும் அவல நிலைக்கானது

விளை நிலமான தூய மனதில் இறைவன் முளைத்திட
பாதை, பாறை, முட்புதர், பாலையாய் மாறிய மனங்களில்
மனிதன் தன்னைத் தொலைத்திட, உள்ளும், வெளியும்
உலாவிடும் சுவாசக் காற்றாய் அவன் மூச்சு

மண்ணால் இறைவன் மனிதனைப் படைக்க
மண்ணால். கல்லால், பொன்னால் சிலைகள் படைத்து
கடவள் எனத் தொழும் மனிதன்

அன்பு, உண்மையைத் தவமாக்கினால் வாழ்வே வழிபாடு
தூய மனத்தவருக்கு சத்திய தரிசனம் மாறாத நிலைப்பாடு,
காசி, இராமேஸ்வரம், க.ஃ.பாவும், கற்சிலையும்-
அழுகைச் சுவரும், வேதமும் மத வழிபாடு
உண்மையே விடுதலை என்றும் மாறாத நிலைப்பாடு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

மனிதனும் மதமும்

கடவுளின் மகனானால், இந்தக் கல்லையும் அப்பமாக்கும்
ஆணவத்தை தூண்டும் அலகையின் ஆசை வார்த்தைகள்
பாலையில் எதிரொலிக்க-அதை நிராகரித்த இறை வார்த்தை

கல்லையும், அப்பத்தையும் கடவுளாக்கி
கடவுளையும், சாத்தானையும் எள்ளி நகையாடும்
கத்தோலிக்க திருச்சபையின் வல்லமைதான் என்னே?

மண்டியிட்டு என்னை வணங்கினால்
மண், பொன், மாட்சி எல்லாம் உமதாகும்
அலகையின் வார்த்தைக்கு அடிபணியாது-தந்தைக்கே
தன் வாழ்வை அர்ப்பணமாக்கிய இறைவார்த்தை

புகழும், வல்லமையும், மாட்சியும், செல்வமும்
திருச்சபைக்கோ உரித்தாக, தொழுவத்தில் பிறந்து
கழுமரத்தில் தொங்கியவரின் வாரிசுகள் கோடி-ஈஸ்வரர்கள்
கற்பு. பணிவு, ஏழ்மை எல்லாம் மாயக் கற்பனைகள்.

மேலிருந்து கீழே குதியும்-மாயம் செய்யும்
புதுமை விரும்பும் மக்கள் புகழ்ந்தேற்றி
உம்மை இறைமகன் என ஏற்பார் பசப்பியது அலகை

உன் ஆண்டவனைச் சோதியாதே கடிந்தவர் சீடர்களோ-
குணமளிக்கும் கூட்டங்களால் புகழ் சேர்க்கின்றார்
இறைவாக்குரைத்தே, இயேசுவை எள்ளி நகையாடுகின்றார்

வழிபாடு எல்லாம் வெற்றுச் சடங்காக
வழிபடுவதும் கல்லும் அப்பமுமமாக, முகவரி தேடும்
முகநூல் விளம்பரதாரிகளின்-அருட்பணிகள்
வெற்று விளம்பரங்களே, மத வியாபாரங்களே

சாரமற்ற உப்பு-சாலையில் மிதிபட, எண்ணெய்யின்றி
விளக்கு இருளில் மூழ்கிட, சஹரானின் குண்டு:
வெடிப்பை முன்னறிவித்த இறைவாக்கினர் யாருமிலர்
கொரோனாவை குணமாக்கிட-குணமளிக்கும்
குருக்களும், போதகர்களும் எங்குமிலர்

கங்கையும் போக்குமோ பாவத்தை
கடாவின் குருதியும் போக்குமோ பாவத்தை?
குற்றத்தை தடுத்து, நீதியை நிலை நாட்டி
சமூகத்தை காக்கவோ திருச்சட்டங்கள்

திருமுழுக்கும், பச்சாத்தாபமும் பாவத்தைப் போக்குமோ ?
அண்ணகரை அருட் பொழிவும் குருவாக்குமோ?
அப்பமும் இறைமகனாகுமோ? உறுதிப்பூசுதலும்
இறையாவியைத் தருமோ? பகுத்தறிவை மழுங்கடிக்க
அபினியும், போதை வஸ்துமாய் மதம்

குருடருக்கு குருடர் வழிகாட்ட
குழியில் விழும் விசுவாசிகளோ மந்தையினம்
அன்னாஸ்-கைபாஸாய் ஆளும் பூசாரி வர்கமோ
ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்க் கூட்டம்

எங்களுக்கு தீமை செய்தவரை நாங்கள்
மன்னிப்பதுபோல் எம் பாவங்களை மன்னித்தருளும்
மன்னிப்பவனுக்கே மன்னிப்பு
அன்பே கடவுள், இரக்கமே இறை பண்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

மனிதர்கள் கட்டிய கோயில்கள்

“இருப்பவர் நாமே” தம் நாமம் இயம்பிய இறைவனுக்கு-
அன்பினால் இறையன்பர் மோஸே எழுப்பிய
கூடாரக் கோயில்- இறைவனும் மனிதனும் இன்புற்று
உறவாடிய சொர்க்க வாயில்

வாக்களிக்கப்பட்ட பூமியில் வரமாயக் கேட்ட தாவீதின் வேண்டுதலை
குருதிக்கறை படிந்த கரங்களால் கோயில் எதற்கென என மறுத்தவர்
ஞானி சாலமோன் கட்டிய கோயிலையும் இடித்தார்-மாமன்னன்
சைரஸ் ஆசியுடன் எஸ்ரா கட்டிய கோயிலையும் தரைமட்டமாக்கினார்

கொலைஞன் ஏரோது புனரமைத்த பேராலயம் இறைவனை
எள்ளி நகையாடிட, கள்வர் குகையும்-கல்லின் மேல் கல் இராதபடி
நிர்மூலமாகும் வல்லவரின் வார்த்தை உண்மையாகிட
அழுகைச்சுவரான ஆலயம் .(70கி.பி.)

நிலந்தேடி அலைந்த மானுடம் நடுவே
நிலையான இருப்பிற்கு இருப்பிடமும் ஏனோ?
கொள்ள முடியாதவரை கொள்ள கட்டிய கோயில் எல்லாம்
இடிந்திட, அழுது புலம்பிட எஞ்சியது அழுகைச் சுவரே

ஆலயம் அமைந்த இடத்தில், அல் அக்ஸா பள்ளி (கி.பி.7)
“தெரிந்து கொள்ளப்பட்ட இனம்”
தம்மை உயர்த்தி, மற்றோரை இகழ்ந்திட
இறைவனில்லாத நாடு-கோயில் இல்லாக் காடானது

நாலு திசையும் அலைந்த யூதரை, ஹிட்லரும் நாசம் செய்திட
வீடு திரும்பியவருக்கு-சோகம் சொல்லியழ ஆறுதலழிக்கும்
அழுகைச் சுவர் வாழ்வின் பிரதிபலிப்பானது-
இறைவன் வரமா சாபமா- புதிரானது?

சொல்லொண்ணாத் துயர் யூதர் வாழ்வில் சுமையானது
வெல்ல முடியாத யூதரை வீழ்திட-பாலஸ்தீனியருக்கு
போரும் , பயங்கரவாதமும் நீதியானது

மனுமகனைக் கொன்றும் மனம் மாறாத மானுடம்-இன்றும்
காயீன், ஆபேலைக் கொல்லும் நிலைகண்டு
மனம் நோகும் சேனைகளின் தேவனோ
யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் வழிபடும் ஒரே தேவன்

அல் அக்ஸாவும்- அழுகைச்சுவரும், உருவில்லாக்
ஒரே கடவுளின் இரு பக்கங்கள்
இருமை கடந்தவர் இறைவனை கண்டார்
அகு இருளில் தடுமாறும் குருடர் மதவாதம் புரிகின்றார்

கல்லையும், அப்பத்தையும் கடவுளாக்கிய மதவாதிகள் நடுவே
கல்லை அப்பமாக்க மறுத்த மனுவுருவான இறை வார்த்தை
உண்மையிலும், ஆவியிலும் இறைவனை தொழுங்கள்
வாழ்வே வழிபாடாகும், நீங்களும் தெய்வங்களே என்றார்

ஆன்மா லயம் பெறும் இடமே ஆலயம்.
இறைவனுக்கு, கல்லால் மண்ணால் எழுப்பிய
கட்டிடங்கள் எல்லாம் இடிந்து போயிட
அன்பே சிவம் வாழ வாஞ்சிக்கும் மானுட இதயம்

மிருகபலி கொடுத்த மானுடம்-நரபலியாய்
மனுமகனைக் கொடுத்திட- பரிணாமத்தில்
மனிதன் பாதி மிருகம் பாதி- மதவாதத்தில்
கடவுள் பாதி- காளை பாதி-கல்லும் மண்ணும் மீதி

மதவெறியும், மதமாற்றமும் புனிதம் என்றாகிட
கொலைவெறி பிடித்த மதவெறியர்களால்
தரைமட்டமான ஆலயங்கள்-அன்றும், இன்றும்
மதப்போலிகள் மலிந்த உலகில்
மதம் போதை வஸ்தானது நிஜத்தில் இன்றும்

சைவமும், வைஷ்ணவமும் மோதியதும்-கொன்றழித்த
சமண, பௌத்த துறவிகளின் அவலமும் சரித்திரத்தில்,
இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் கொன்று குவித்த மானுடம்,
அன்பு இறைவன் வாழும் இடமோ தூய உள்ளம்

சித்தனுக்கும், புத்தனுக்கும் ஆலயங்கள் தேவையில்லை
பொன்னும், புகழும் தேடும் பொய்யர்
அன்னாஸ் கைபாஸ் ஆலயங்களை ஆண்டிட
கள்வர் குகை என இயேசு சாடிட
காலவெள்ளத்தில் அடியுண்டு மறைந்த மதங்களும்.
ஆலயங்களும்தான் எத்தனை? எத்தனை ?

நொருங்கிய இதயத்தை இறைவன் விரும்புகிறார்
உண்மையும், அன்பும், அறமானால் வாழ்வே வழிபாடு
உள்ளம் கோயிலானால் உனக்கு நீயே தெய்வம்

அபினியும், போதையுமான மதங்கள்
பிரிவினையின் நச்சு விதைகளே!
உண்மையே தெய்வம்! உண்மையே விடுதலை!
அன்பைத் தவமாக்கி மூழ்கி, உண்மையை வரமாக்கி
வாழ்ந்தால்-வாழ்வு சச்சித் ஆனந்தமே

உனக்கு நீயே ஒளி-உனக்கு
நீயே அரண்-உலகின் உப்பு நீ
நானும் தந்தையும் ஒன்றே
அஹம் பிரமஸ்மி-தத் துவம் அஸி

உன்னையே நீ அறிவாய்-இறைமகனே நீ
அன்பே சிவம்-வாழ்வே தவம் -
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
உள்ளுணர்வின் உன்னதமே இறைவன்

எங்கும் வியாபித்து இருப்பது இறை தன்மை
கண்டு தொழுவது பக்தனின் மேன்மை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

மரணம்

என் கடன் கழிந்து கடமைகள் முடிந்தபின்
கர்மவினைகள் தீர்ந்தபின்-மரணமென்னும்
பெருங்கொடையால் உருவழிந்து -பிரபஞ்சத்தில்
ஒன்றாகிட இறைவன் வரம் ஈந்தான்
உடலம் மண்ணாக உயிர்மூச்சு விண்ணேக
உன்னோடு ஒன்றானேனன் என் இறைவா

ஏழ் ஏழ் பிறப்பெடுத்து மரித்தே
பிறப்பறுத்து -மாறாத
சூனியத்தில் ஒன்றான சுயம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

மதவாதம்

எல்லாம் வல்லவர் கட்டளைகளை மீறுபவர் எல்லாம்
காலமழியாக் காலம் வரை மீளா எரிநரகத்தில் வெந்து கதற
அன்பே கடவுள் என இயம்பும் மதங்கள் இறைஞ்சுவதோ பணம்
இறைவன் விரும்புவதோ நொருங்கிய மனம்

நிறுவனங்களாய் மாறிட்ட மதங்கள்-மக்களைச் சுரண்டிப்பிழைக்க-
அபினியும், போதை வஸ்துமாய் வல்ல இறைவன் நாறி மணக்க
சவாலே இல்லாத சகல கலா வல்ல நிறுவனங்கள்
"நிர்வானமோ" வான் நிலவான அவலங்கள்

மதப்போதை மானுடத்தைப் பிரிக்க
செல்வத்தை சுரண்டி மதவாதம் கொழுக்க
எளிமையோ தேடியும் கிடைக்காத செல்வம்
இரக்கமோ காணக் கிடைக்காத பொக்கிஷம்

உண்டியல்கள் இல்லாத ஆலயங்கள் இல்லை
உழைப்பை உறிஞ்சும் ஆளும் வர்க்கமாய்
மதங்களோ மாறிட்ட அவல நிலை

மனுமகன் மரித்து, உயிர்த்து வானகம் சென்றிட,
அன்பு, இரக்கம், மன்னிப்பை மறந்த பேதுரு-
அனனியா சப்ராவை அகாலமாய்க் கொன்று அரியணை அமர
பாதை மாறிய பயணம்-பவுலும் சீடனான துயரம்

மனுமகனுக்கு மதம் கொடுத்ததோ பாரச்-சிலுவை
மதவாதிகளின் கழுத்திலோ தங்கச் சிலுவை?
தூய மனத்தவருக்கோ சத்திய தரிசனம்
மதவாதிகளுக்கோ வத்திக்கான் சிம்மாசனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18.06.2023

- the middle class, typically with reference to its perceived materialistic values or conventional attitudes
- the capitalist class wealth and means of production

மதம் என்னும் மாயை

நீறு தரித்த சைவர், நாமம் தரித்த வைஷ்ணவர்
சிலுவை அணிந்த கிறிஸ்தவர்
தொப்பி அணிந்து தாடி வளர்த்த இஸ்லாமியர்

முடியும் தாடியும் சீக்கியர் கோலம்
பிரித்நூல் கட்டிய பௌத்தர் அலங்காரம்
மெய்யில் மதக் கோலங்கள்-உள்ளத்தில்
மதவாதத்தின் அழியாத அலங்கோலங்கள்

உள்ளம் கோயிலாயில்லை-அன்பு வாழும்
தெய்வம் அகத்தில் இல்லை-மூடர் கோயில்களில்
கற்சிலைகளோ தெய்வங்களான அவல நிலை

செத்த வேதங்களும்-வெற்றுச் சடங்குகளும்-
இன்றும் பார்பனர் கையில்:
அச்சமும், அறியாமையும் மூட நம்பிக்கையும்
பக்தர்கள் நெஞ்சில்

வெண்ணங்கியும், வெற்றுச் சிலுவையும்,
மழித்த சிரசும், காவியும், குல்லாவும், தாடியும்
வேஷங்கள், மதவாதிகளின் பாதங்களில்
மகுடங்களும் மண்டியிடும் அவலங்கள்

கற்சிலைகள் தெய்வங்களாகும்
காற்றில் வரையும் சிலுவைகள் ஆசிர்களாகும்
பாதம் பணிதல் மரபாகும்-தெய்வங்களோ
பார்பனன் மகுடியில் ஆடும் திரு நாகங்களாகும்

பகுத்தறிவை பறிகொடுத்த ஏமாளிப் பக்தர்கள்
அன்பே சிவம்!, இறைவனே நம் தந்தை
அல்லாகு அக்பர், புத்தம் சரணம் கச்சாமி
நாளும் ஒலிக்கும் வெற்று கோஷங்கள்

இராமர் கோயிலும்-பாபர் மசூதியும்-அழுகைக்
சுவரும்-அல் அக்ஸா பள்ளியும் யுத்த பூமிகள்
மதவெறி பகுத்தறிவை மறைக்க, மதப் பயங்கரவாதம்
சாதியம், தீண்டாமை திருச்சட்டங்கள்

வரலாற்றில் இரத்தகறை படிந்த வாளோடும், பீரங்கித் தீயோடும்
நாடு பிடித்த வல்லரசுகளின் வன்புணர்வாய், காலனித்துவ நாடுகளில்
மதமாற்றங்கள், அன்பு இறைவனுக்கு அலகையின் முகமூடிகள்
அப்ப ரசத்துள்-அம்மான் மகனைச் சிறைவைத்த சடங்குகள்

மத்திய கிழக்கில், யெகோவாவின் சேனைகளுக்கும்
அல்லாவின் முஜாகிதுகளுக்கும் நாளும் யுத்தங்கள்
இளைப்பாற இடமின்றி அமைதிப்புறா துன்புற-
இன்றும் பாலஸ்தீனர்களோ அகதிகள்

கறுப்பு அடிமைத்தனத்தை நூற்றாண்டுகளாய்
நியாயப்படுத்தி வெள்ளைத் திருச்சபைகள்
விவிலியத்திலும் சாத்தானின் வசனங்கள்

சூத்திர அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி
மனுதர்மத்தை போற்றும் சனாதன தருமம்
வருணாச்சிரமமோ அதர்மம்

காவிகள் சூடிய காயத்துள்-தம்மபதம் சொல்லாத
இனத்துவேஷம், முல்லாவின் குல்லாய்குள்
அல்குரானும் சொல்லாத வன்முறையின் உபதேசம்

வெற்றுச் சிலுவைகளோடு-இயேசுவை தேடிடும் சபைகள்-
கண்டால் இயேசுவைக் காட்டிக் கொடுக்கலாம்
யூதாஸ்களே- 30- வெள்ளியும் முத்தமும் இலவசம்.
மதமோ வேஷம், மதமாற்றம் மலிந்த விபச்சாரம்

பௌத்தர்களே புத்தரைக் கண்டால் கொல்லுங்கள்
எவரும் புத்தராகலாம், “புத்தநிலை உங்களுக்குள்ளே”
மனிதர்களே-இயேசுவை கண்டால் சொல்லுங்கள்
நாங்களும் இறைமக்களே-நாளும்
சிலுவை சுமந்திடும் மீட்பர்களே-புதிய மெசியாக்களே

பௌத்தத்தில் “புத்தநிலையில்லை”
திருநீறுக்குள் சத்திய நெருப்பில்லை
கிறிஸ்தவத்தில் “விழிப்பு நிலை” இல்லை
பிறையிலோ சகோதரத்துவமில்லை

எங்கும் வன்முறையின் நெருப்பு பற்றி எரிந்திட
அழுகைச்சுவர்களிலோ - பலஸ்தீனர்களின் இரத்தக் கறை
தர்மசக்கரத்திற்கோ அச்சாணி முறிந்த அவலநிலை
வெற்றுச்சிலுவையிலோ இயேசுவின் இரத்தக் கறை

இளம்பிறையிலோ வன்முறையின் கொடிய நிலை
மதங்கள் போதையும், அபினியுமான நிலை

அன்பே சிவம் அலங்கார விளக்கானபோது
அகத்தில் இருள் சூழ்ந்தது
அல்லாகு அக்பர் ஐவேளை கோஷமானபோது
அமைதிப் புறா பறந்து போனது

பிரித்தும் 'தம்மம்'' மறந்து வெற்றுச் சத்தமானபோது
காவிக்குள்ளும் அதர்மம் உதயமானது
ஆண்டவர் என் ஆயன் எனக்கென்ன குறை-
பொய்யாய் பழங்கதையாய் போனது
ஆலயங்களும் கள்வர் குகையாய் நாறியது

எரியும் முட்செடியில் இறைவனைக் கண்டவர்கள்
வாட்டிய பத்து கொள்ளை நோய்களால்
வல்லமைதான் நீதி-வன்முறைதான் பாதை அறிந்தார்?

எரியாமல் அழிக்கும் எரிநரகின் தேவனாய் ''ஹிட்லரை''
கண்டவர்கள், பொன்கன்று குட்டியாய் அணுகுண்டைப் படைத்து,
நவீன 'ஹிட்லர்களாய்' ''உருமாறினார்''
பரபாஸை தெரிந்து இயேசுவை நிராகரித்தார்

பள்ளிகொண்ட கிருஷ்ணனும்-கல்கி
அவதாரமெடுக்கவில்லை, பாற்கடலில் சுனாமி போலும்
புத்தரும்- மைத்திரேய அவதாரம் எடுக்கவில்லை
தம்மம்- அதர்மத்தில் சங்கமித்ததுபோலும்

விண்ணகம் சென்ற இயேசுவும் திரும்பி வரவில்லை
வானகத்தில் நட்சத்திரப்போர் போலும்
மெசியாவும் வரவில்லை, அணுகுண்டே-மெசியா
அறிந்தார் யூதர்கள் போலும்

கீதையில்- குருஷேத்திரம், அல் குர்ரானில் - ஜிகாத்
கிறிஸ்தவத்தில் சிலுவை யுத்தம், பௌத்தத்தில் பேரினவாதம்
அன்பிழந்து போராடும் மத அலங்கோலங்கள்.

கற்சிலைகள் நடுங்கிட, மந்திரங்களின் சத்தங்கள் ஒடுங்கிட
வேள்வி, சடங்குகளின் வேஷம் கலைந்திட, சாதியம்,
இனவாதம் ஒழிந்திட, அன்பே தெய்வம்
விழிப்புணர்வே விடுதலை மனிதா முழங்கி
உனக்கு நீயே ஒளியாகிப் போ

மதம் பழங்கதையானது, விழிப்புணர்வே ஆன்மீகம்,
அன்பே சிவம், வாழ்வோ சச் சித் ஆனந்தம்

நெற்றியில் நீறோ, நாமமோ, நெஞ்சில் சிலுவையோ இல்லை
உச்சியில் தொப்பியோ, கையில் நூலோ இல்லை
அன்பே தெய்வம், உண்மையே விடுதலை-அனுபூதியில்
அறிந்த சுத்த சைதன்யம் நாங்கள்.

புத்த பிரக்ஞ்சையின் மைத்திரேயனாய்,
கிருஷ்ண பிரக்ஞ்சையின் கல்கியாய்
கிறிஸ்து பிரக்ஞ்சையாய்-மதம் கடந்த
மனித நேயனாய் நாங்கள்

ஓம் சாந்தி ஓம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-07-2023

மதம்

அண்ணலும் நோக்க, அவளும் நோக்க
இரு மனம் கலந்து பூத்த காதல்
மதம் கடந்து- மணமாலை சூட
இல்லறத்தில் நிலைத்த இன்ப வாழ்வு

மணக்கும் இல்லறம், வள்ளுவனைப் போற்ற
எது மதம? ஏன் மதம்
அன்பே சிவம் என்றார் காதலர்

அறத்துப்பாலில் ஒழுகி, பொருட்பாலில் நின்றுழைத்து
இன்பத்துப்பால் பொங்கி, இல்லறம் ஏற்று
வாழ்வே வீடானவருக்கு, இனியொரு மதம் ஏனோ?

மதம் கடந்து, மனம் கழித்து,
அறம், பொருள், இன்பம் அறிந்து
பதியாய்-பத்தினியாய் நின்ற தம்பதி
இல்லறமே நல்லறம் என்றார்
வீடோ இறை வரம் என்றார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023